REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 29 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரන්

1932 - 2022

வரு. 90 இல. 99 | Friday 29, April, 2022 | 16 பக்கங்கள் | 30/-

## இலங்கை கிரிக்கெட்டுக்கு 14 புதிய பயிற்சியாளர்கள்



இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 14 புதிய பயிற்சியாளர்களை நியமித்துள்ளது.

அதன்படி, இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக நெதர்லாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமை 06

## சகல கட்சிகளையும் உள்ளடக்கி புதிய இடைக்கால அரசாங்கம்

### ஆளும் கட்சி தலைவர்களுடன் ஜனாதிபதி இன்று பேச்சு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வுகாணும் வகையில் அனைத்து கட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பான பேச்சு

**ஓரிரு தினங்களில் அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை**

வார்த்தையொன்று ஆளும் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் ஜனாதிபதி 06

## அத்தியாவசிய சேவைகள் விநியோக நெருக்கடி: ஒரு மாத காலத்தில் தீர்வு

### பாராளுமன்றில் நிதியமைச்சர் அலி சப்ரி உறுதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சாரம், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான விநியோகம் தொடர்பில் உருவாகியுள்ள நெருக்கடிகளுக்கு ஒரு மாத காலத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுமென நிதியமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று வலுசக்தி மற்றும் மின்சக்தி, வர்த்தக 06

### இன்றைய சர்வ கட்சிகளின் சந்திப்பு

## ஜனாதிபதியின் அழைப்பு குறித்து CWC ஆலோசனை

### ஒன்றுகூடி ஆராய்ந்து முடிவு – செந்தில்



அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் நடத்தப்படும் ஜனாதிபதி மாளிகையில் நடத்தப்படவுள்ள கலந்துரையாடலுக்கு தமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதும் அதில் கலந்துகொள்ள செல்வது தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கவில்லை என 06

# நாடளாவிய ரீதியில் நேற்று தொழிற்சங்க போராட்டம்



## மக்களின் இயல்பு நிலை பெரிதும் பாதிப்பு

### இ.போ.ச, துறைமுகம், விமான நிலையம், தனியார் நிறுவனங்கள் வழமைபோன்று இயங்கின

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று (28) நாடு முழுவதும் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அடையாள வேலைநிறுத்தம் காரணமாக பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்தது.

கொழும்பு உட்பட முக்கிய நகரங்களில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் மக்கள் தமது அன்றாட கடமைகளை மேற்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

போக்குவரத்து வசதிகள் வெகுவாக குறைந்தமை காரணமாக பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டதுடன் பெருமளவிலான மாணவர்கள் 06

## சுரேன், சாந்தவை நீக்கினால் மாத்திரமே பேச வருவோம்

### ஜனாதிபதியின் அழைப்புக்கு SLFP பதில்

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் முதல் கட்ட பேச்சுவார்த்தையை நடத்தும் முகமாக 06

## இடைக்கால அரசாங்கம்; எனக்கு உடன்பாடில்லை

### வன ஜீவராசிகள் அமைச்சர் விமலவீர



இடைக்கால அரசு அமைப்பதில் தனக்கு உடன்பாடு இல்லையென வனஜீவராசிகள் அமைச்சர் விமலவீர 06




### எதனையும் மறைத்துப் பயனில்லை

## பிரச்சினைகளுக்கு நேரடி தீர்வே தேவை

### முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர் கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் பிரச்சினைகளை மறைத்து பயனில்லை என்றும் அதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு விரைவான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுவது முக்கியமெனவும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் குழப்பமடைய தேவையில்லை என தெரிவித்துள்ள அவர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை ஆராய்வதே அவசியம் என்றும் நோய்க்கு சரியான மருந்தை வழங்குவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 06

### பணியாளர்கள் வரவு குறைவு எனினும்

## துறைமுக, விமான நிலைய செயற்பாடுகள் வழமை





நாடு தழுவிய ரீதியாக பல அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ள போதிலும் கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகம் என்பவற்றின் செயற்பாடுகள் வழமை போன்று 06

### அந்நிய செலாவணி பற்றாக்குறை

## நன்கொடைகளை கோரும் மத்திய வங்கி

அந்நிய செலாவணி கையிருப்பு குறைவதால் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை போக்க வெளிநாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்கள் மற்றும் நன்கொடையாளர்களின் உதவியை எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி 06

## விலை அதிகரிப்பு

தினகரன் | தினகரன் வாரமஞ்சரி

அச்சுத் தாள்களின் விலையுயர்வு மற்றும் இதர செலவுகளின் அதிகரிப்பின் காரணமாக தினகரன் பத்திரிகையின் விலை 40 ரூபாவாகவும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் விலை 80 ரூபாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.



### இன ஐக்கியம் உருவாகியுள்ளமை உண்மையெனில்

## முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்களவர், முஸ்லிம்களும் பங்கேற்க வேண்டும்

03




### நோய்க்கு சிகிச்சை பெற்றுவந்த

## சிங்கள நடிகை அனுஷா சோனாலி காலமானார்



சிங்கள நடிகை அனுஷா சோனாலி நேற்று காலமானார்.

களுபோவில வைத்தியசாலையில் நேற்று 06


## டொலர் ரூ.500 வரை அதிகரிக்க வாய்ப்பு!

### முன்னாள் கணக்காய்வாளர் காமினி விஜேசிங்க



அமெரிக்க டொலரின் மதிப்பு இந்த ஆண்டின் இறுதிக்குள் 500 ரூபா வரை அதிகரிக்கலாம் என முன்னாள் கணக்காய்வாளர் காமினி விஜேசிங்க எச்சரித்துள்ளார். 06

## தனியார் பஸ்கள் போராட்டத்தில் பங்கேற்கவில்லை



இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்றைய வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. எனினும் அடுத்த வாரம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் தலைவரான 06

## நாமலுக்கு எதிரான வழக்கு விசாரணை

### செப். 14 இல் இடம்பெறும்



முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உட்பட 6 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி மேலதிக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. 06



# சர்வதேச செய்திகள்

உக்ரைன் போர்:

## வெளிநாட்டு தலையீட்டுக்கு எதிராக புட்டின் மீண்டும் கடும் எச்சரிக்கை

உக்ரைன் போரில் எந்த நாடேனும் தலையிட முயன்றால் "மின்னல் வேகத்திலான" பதிலடி ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"யாரும் பெருமை கொள்ள முடியாத அனைத்து கருவிகளும் எம்மிடம் உள்ளன. தேவைப்பட்டால் அவற்றை பயன்படுத்துவோம்" என்று அவர் குறிப்பிட்டார். பலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை குறிப்பிடுவதாக அவரது இந்தக் கருத்து இருந்தது.

உக்ரைனின் நட்பு நாடுகள் அயுதங்களை வழங்க முன்வந்திருப்பதோடு ரஷ்யாவை வீழ்த்த உக்ரைனுக்கு உதவுவதாக அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. இதில் 50 விமான எதிர்ப்பு டாங்கிகளை அனுப்புவதாக ஜெர்மனி அறிவித்தது, உக்ரைனுக்கு போர் விமானங்களை வழங்க பிரிட்டனும் அழைப்பு விடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் மேற்கு நாடுகள் "நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுவதாக" ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் இந்த வார ஆரம்பத்தில் கூறினார். அத்துடன், இந்த மோதல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கிழக்கு உக்ரைனில் ரஷ்யா தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருப்பதாக மேற்கத்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தலைநகர் கியேவை சூழவுள்ள பகுதியில் இருந்து வாபஸ்பெற்ற ரஷ்யா டொன்பாஸ் பிராந்தியத்தை



கைப்பற்றும் பாரிய தாக்குதலை கடந்த வாரம் ஆரம்பித்தது.

எனினும் ரஷ்யப் படை உக்ரைனின் கடும் எதிர்ப்பை சந்தித்து வருவதாகவும் இழப்புகளை எதிர்கொண்டிருப்பதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் செயின்ட் பீட்டர்ஸ் பேர்க்கில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கடந்த புதன்கிழமை உரையாற்றிய புட்டின், "உக்ரைனில் வெளியில் இருந்து யாரேனும் தலையிட முயன்று, ரஷ்யாவுக்கு மூலோபாய அச்சுறுத்தலை ஏற்படுத்தினால் எமது பதிலடி மின்னல் வேகத்தில் இருக்கும்" என்று எச்சரித்தார்.

"யாரும் பெருமை கொள்ள முடியாத அனைத்து கருவிகளும் எங்களிடம் உள்ளன. அவைகள் பற்றி நாம் தற்பெருமை காட்டமாட்டோம், தேவைப்பட்டால் அவைகளை பயன்படுத்துவோம்" என்றும் புட்டின் கூறினார்.

அணுசக்தி கொண்ட அதிவேக, புவியீர்ப்பு ஏவுகணைகளை ரஷ்யா அண்மையில் சோதித்திருந்தது. அவற்றை இடைமறிக்க மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் தோல்வியடையலாம் என்று கூறப்படுகிறது.

## மத்திய ஆபிரிக்க குடியரசு பிட்கொயினுக்கு அங்கீகாரம்



உலகில் இரண்டாவது நாடாக மத்திய ஆபிரிக்க குடியரசு மின்னணு நாணயமான பிட்கொயினை சட்டபூர்வ நாணயமாக அங்கீகரித்துள்ளது.

மத்திய ஆபிரிக்க குடியரசு உலகின் வறிய நாடுகளில் ஒன்றாக இருந்தபோதும் வைரங்கள், தங்கம் மற்றும் யுரேனிய வளங்களைக் கொண்டுள்ளது. மேலும் அங்கு பல தசாப்தங்களாக மோதல் இடம்பெற்று வருகின்றது.

பிட்கொயினை ஒரு செல்லுபடியான பணமாக அங்கீகரிப்பதற்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக வாக்களித்தனர் என்று ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு உலகின் முதல் நாடாக எல் சால்வடோர், பிட்கொயினை செல்லுபடியான நாணயமாக அங்கீகரித்தது. இந்த நகர்வை சர்வதேச நாணய நிதியம் உட்பட பல பொருளாதார நிபுணர்களும் விமர்சித்தனர். இது நிதி ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டது.

## 66 பேரை பலிகொண்ட விமானியின் 'சிகரெட்'



2016 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி 66 பேர் கொல்லப்பட்ட எகிப்து விமான விபத்துக்கு விமானி பிடித்த சிகரெட் காரணம் என்று பிரான்ஸ் விமானப் போக்குவரத்து நிபுணர்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாரிஸின் கார்ல்ஸ் டி கவுல்லே விமான நிலையத்தில் இருந்து கெய்ரோவை நோக்கி புறப்பட்ட இந்த விமானம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் விமானி முஹமது செயித் ஷுகைர், நடுவானில் புகை பிடித்தபோது, அவரது சிகரெட் விமானி அறையில் இருக்கும் ஒட்சிசன் முகமூடியில் இருந்து ஒட்சிசன் கசிவை ஏற்படுத்தி இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விமானத்தின் கறுப்புப் பெட்டி தரவு அடிப்படையிலேயே நிபுணர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

## பாம் எண்ணெய் ஏற்றுமதி: இந்தோனேசியாவில் தடை



இந்தோனேசியா பாம் எண்ணெய் ஏற்றுமதியை நேற்று வியாழக்கிழமை தொடக்கம் முற்றாக தடை செய்துள்ளது.

உலகின் மரக்கறி எண்ணெய் சந்தையில் ஏற்கனவே விலை உச்சத்தைத் தொட்டிருக்கும் நிலையிலேயே உலகின் மிகப்பெரிய பாம் எண்ணெய் உற்பத்தி நாடு இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்தோனேசியாவில் ஏற்கனவே சமையல் எண்ணெய் தட்டுப்பாடும் மற்றும் விலை அதிகாரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. பல நகரங்களிலும் அத்தியாவசிய பொருட்களை மானிய விலையில் வாங்குவதற்கு நீண்ட வரிசையில் மக்கள் காத்துள்ளனர்.

இந்நிலையில் சமூகப் பதற்றத்தை தணிக்கும் வகையில், உள்நாட்டு விநியோகத்தை பாதுகாக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய சக்தியாக உள்ள உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்து அண்மைய வாரங்களில் விலை அதிகரிப்புக்கு உள்ளான அத்தியாவசிய பொருட்களில் மரக்கறி எண்ணெய்களும் இடம்பெற்றுள்ளன.

## ஒருவருக்கு நோய் அறிகுறி: 10 மில். பேரிடம் சோதனை



சீனாவின் ஹங்ஸோ நகரக் குடியிருப்பாளர்களுக்குப் பெரிய அளவில் வைரஸ் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அங்கு ஒருவர் அறிகுறிகளின்றி பாதிக்கப்பட்டுள்ளதால் அந்த முடிவு எடுக்கப்பட்டது. 10 மில்லியன் பேர் வசிக்கும் ஹங்ஸோ நகரில் ஒவ்வொரு 48 மணிநேரத்துக்கு ஒருமுறை மக்கள் வைரஸ் தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.


சீனாவின் ஷங்ஹாய் நகருக்கு அருகே ஹங்ஸோ அமைந்துள்ளது.

ஷங்ஹாயில் உள்ள சில குடியிருப்புப் பேட்டைகளில் சில நடமாட்டங்களை அனுமதிக்க அங்கு மீண்டும் வைரஸ் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஷங்ஹாயில் நேற்று புதிதாக 10,000க்கும் மேற்பட்டோருக்குக் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

தினசரி வைரஸ் தொற்றுக்கு ஆளாவோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இருப்பினும் நாட்டில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையில் அது 95 வீதத்துக்கு மேல் பங்கு வகிக்கிறது.

## முஸ்லிம் வழிபாட்டாளர் மீது சரமாரிச் சூடு: 20 பேர் பலி



எத்தியோப்பியாவின் அம்ஹாரா பிராந்தியத்தில் இறுதிச் சடங்கு ஒன்றில் கலந்துகொள்ளச் சென்ற 20 முஸ்லிம் வழிபாட்டாளர்கள் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயுதங்களுடன் வந்த கடும்போக்கு கிறிஸ்தவர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் ஒரு "படுகொலை" என்று அம்ஹாரா பிராந்திய இஸ்லாமிய விவகார சபை குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்தாரிகள் "இயந்திரத் துப்பாக்கியால் சரமாரியாக சூடு நடத்தியதில் பலர் கொல்லப்பட்டதோடு காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்" என்று அந்த சமய அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எத்தியோப்பிய மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருக்கும் பழைமைவாத கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே தற்போது நீடிக்கும் முரண்பாட்டுக்கு மத்தியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலைச்சாரல்



வேலைநிறுத்த போராட்டம்

## மலையகத்தில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு









**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி, கினிகத்தேனை தினகரன் நிருபர்கள்**

அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவாக மலையகத்திலும் வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

அரசதுறை, அரசசார்பற்ற தனியார் துறை, பெருந்தோட்டத்துறை, வெகுஜன அமைப்புகள் உள்ளிட்ட பல துறைகள் கூட்டாக இணைந்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள், மின்சார சபை, சுகாதாரம், துறைமுக ஊழியர்சார் தொழிற்சங்கங்கள், தபால், பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள தொழிற்சங்கங்கள், வங்கிசார் தொழிற்சங்கங்கள் உட்பட மேலும் பல தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. மலையகத்தில் உள்ள பிரதான இரு கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன இப்போராட்டத்துக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன. இதற்கமைய தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலைக்கு செல்லவில்லை. வீடுகளுக்கு முன்னால் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மலையக பெருந்தோட்ட பகுதிகளை அண்டியுள்ள நகரங்களில் 90 வீதான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இருந்தாலும் ஒரு சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. அதேபோல சதொச, எரிபொருள் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. இவற்றின் முன்னால் நீண்ட வரிசை காணப்பட்டது.

பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பித்திருந்தது. இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. ஆட்டோ சாரதிகள் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை குறைவடைந்துள்ளது

நுவரெலியா மாவட்டத்தின் சகல நகரங்களிலும் உள்ள சிபெட்கோ மற்றும் ஐ.ஓ.சி ஆகிய நிறுவனங்களுக்குரிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் என்பன போதியளவு கிடைத்து வருவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர். அதனால் நீண்ட வரிசை குறைவடைந்துள்ளதாக நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

நுகர்வோருக்கு தேவையான எரிபொருள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் தடையின்றி விநியோகிக்கப்பட்டாலும் எரிபொருள் விலை அதிகரிப்பால் விற்பனையில் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை முன்னரைப் போன்று வரிசைகளில் காத்திருக்காமல் தமக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதாகவும் வாகன சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

## கண்டியில் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு

அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் நடாத்திய வேலை நிறுத்த போராட்டத்தால் கட்டுகஸ்தோட்டை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று மரக்கறிகள் குறைந்தளவே கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு வருகைத் தரும் வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோரின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொருளாதார நிலையத்தின் மொத்த வியாபாரிகள் சங்கம் தெரிவித்தது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்பு தெரிவித்து, முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களும் மூடப்பட்டு காணப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 29 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN


தொழுகை நேரம்

25 முதல் 29 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 12.10
அஸர் - 03.23
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# இந்தோனேசியாவிலிருந்து இலங்கைக்கு 3.1 மெ.தொன் மனிதாபிமான உதவிகள்

## முதற் தொகுதி நேற்று இலங்கை வந்தடைவு



### 02 ஆவது தொகுதி மே. 08 ஆம் திகதி வரும்

### இந்தோனேசிய தூதுவர் அமைச்சர் பீரிஸிடம் உறுதி

இந்தோனேசியாவிலிருந்து இலங்கைக்கு 3.1 மெ.தொன் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவுள்ளன. இதன் முதற் தொகுதி நேற்று 28 ஆம் திகதி விமானம் மூலம் இலங்கை வந்தடைந்துள்ளதாகவும் இரண்டாவது தொகுதி எதிர்வரும் மே. 08 ஆம் திகதி இலங்கையை வந்தடையுமென்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இந்தோனேசியாவின் தூதுவர் திருமதி. டெவி குஸ்டினா டோபிங்கை கடந்த 27ஆம் திகதி அமைச்சில் வரவேற்றதுடன், இந்தோனேசியா அரசாங்கத்தின் இலங்கைக்கான மனிதாபிமான உதவியின் புதிய தகவல்கள் தொடர்பில் இந்தோனேசியத் தூதுவர் அமைச்சரிடம் விளக்கமளித்தார். இதன்போதே அவர் இத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுகாதார அமைச்சின் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான கோரிக்கைக்கிணங்க, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உள்ளடக்கிய 517.5 மில்லியன் இலங்கை ரூபா (சுமார் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்) பெறுமதியான 3.1 தொன் மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக இந்தோனேசிய அரசாங்கம் இலங்கையின் சுகாதார அமைச்சு மற்றும் இந்தோனேசியாவிலுள்ள உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி அலுவலகத்தின் ஆலோசனையுடன், சுகாதார அதிகாரிகள் மற்றும் இந்தோனேசிய மருந்துவத் துறையுடன் இணைந்து பணியாற்றியதாக தூதுவர் டோபிங் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

மனிதாபிமான உதவிகள் இரண்டு தொகுதிகளாக இலங்கையை சென்றடையுமென்றும், ஜகார்த்தாவிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் நேற்று முதலாவது விமானம் வந்து சேந்துள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

மீதித் தொகை எதிர்வரும் மே 08ஆம் திகதி,

06




## உச்சளவில் பயன்படுத்திட வேண்டிய நாட்கள்

ரமழான் மாதத்தின் இறுதிப் பகுதியை முஸ்லிம்களாகிய நாம் தற்போது அடைந்துள்ளோம். அடுத்து வரும் சில நாட்களில் ரமழான் எம்மை விட்டு விடைபெறுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றது. அதனால் இந் நாட்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமான இறைவிசுவாசியினதும் பொறுப்பாகும்.

ஏனெனில் மாதங்களில் மிக மகத்துவம் மிக்க மாதமாக ரமழான் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இம் மாதத்தில் தான் உலகம் இருக்கும் வரையும் இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் நேர்வழிகாட்டக் கூடிய உலகலாவிய அருள்மறையான அல் குர்ஆன் 'லஹுபுல் மஹ்பூல்' என்ற பாதுகாக்கப்பட்ட ஏட்டிலிருந்து முதல் வானத்திற்கு இறக்கியருளப்பட்டது. அல்லாஹ்தஆலா இம்மாதத்தை அருள் நிறைந்ததாக சிறப்பித்து வைத்திருக்கின்றான்.

அந்த வகையில் இம்மாதம் கொண்டுள்ள இறையருட் கொடைகளை அடைந்துகொள்ளும் நோக்கில் அல்லாஹ்வின் கட்டளைப்படி நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப முஸ்லிம்கள் நோன்பு நோற்று இறை வணக்கங்களில் ஈடுபட்டு ஆரம்பம் முதல் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்கள். என்றாலும் ரமழானில் இன்னும் சில நாட்கள் எஞ்சியுள்ளன. அந்த நாட்களையும் அல்லாஹ்வின் விருப்பதற்கு அமைய உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக ரமழான் பாவமன்னிப்புக்கான மாதமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'யார் ரமழானை அடைந்தும் பாவ மன்னிப்பு பெற்றுக் கொள்ளவில்லையோ அல்லாஹ் அவரைத் தூரமாக்கட்டும்' என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் பிரார்த்தனை செய்ய அதற்கு நான் 'ஆமீன்' என்று கூறினேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஹாகிம், இப்னு ஹிப்பான்)

மனிதன் இயல்பாகவே தவறுகள், பாவங்கள் புரியக்கூடியவனாக இருக்கின்றான். என்றாலும் தம் தவறுகள், பாவங்களை உணர்ந்து அவற்றுக்கு அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருவது இன்றியமையாதது. அது அல்லாஹ்வின் விதிமுறையாகும். இதைவிடுத்து அல்லாஹ்விடமிருந்து தூரமாவது மாபெரும் கைசேதமாக அமைந்துவிடும். அல்லாஹ் எம்மெல்லோரையும் பாதுகாக்க வேண்டும். அதனால் ரமழானில் எஞ்சியுள்ள நாட்களையும் கடந்த நாட்களில் அல்லாஹ்வின் அருளை அடைந்து கொள்ள பயன்படுத்தியது போன்று பயன்படுத்திக் கொள்வதிலும் பாவமன்னிப்பு கோருவதிலும் அக்கறையும் சிரத்தையும் எடுத்துக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

---

இன ஐக்கியம் உருவாகியுள்ளமை உண்மையெனில்

# முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தில் சிங்களவர், முஸ்லிம்களும் பங்கேற்க வேண்டும்

### TELO இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதம் எம்.பி அறிக்கை



நாட்டில் இன ஐக்கியம் உருவாகியுள்ளதாக இருக்குமேயானால் முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தில் சிங்கள, முஸ்லிம் மக்களும் கலந்துகொள்ள வேண்டுமென வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் எதிர்கொண்டுள்ள சிக்கல் நிலைமைக்கு காரணமான ஆட்சியாளர்களை வீட்டுக்கு செல் என காலிமுகத்திடல் தொடக்கம் நாடு பூராகவும் போராட்டம் இடம்பெறுகின்றது. இந்த போராட்டங்கள் ஜனநாயகரீதியான போராட்டம் என்பதால் நாமும் இதனை வரவேற்பதோடு போராட்டத்திற்கான ஆதரவை தெரிவிக்கின்றோம்.

அத்துடன் ஜனநாயக ரீதியான இப் போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு யுத்தகாலத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதனை சகோதர சிங்கள மக்களும் தெரிவித்து வருகின்றனர்.

06

# நுகர்வோரை பாதுகாப்பதற்கு விசேட வர்த்தமானி வெளியீடு

### நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஏற்பாடு

சகல உற்பத்தியாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தங்களிடமுள்ள பொருட்களின் விவரங்களை தெளிவாக வைத்திருக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.இது தொடர்பில் அதன் தலைவர் மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இவ் வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது. விநியோகஸ்தரின்



பெயர், முகவரி, வாங்கிய திகதி, விலை, பொருட்களின் வகை, அளவு மற்றும் தொகுதி எண் ஆகியவற்றைக் கொண்ட பட்டியில்களை வைத்திருக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தத் தகவல்களுக்கு உட்படாத பொருட்கள் மற்றும் தயாரிப்புகளை விற்கவோ, சேமித்து வைக்கவோ, விநியோகிக்கவோ, விற்பனைக்கு வழங்கவோ அல்லது விற்பனைக்காகவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாடின்றி அதிக விலைகளில் பொருட்கள் விற்கப்படுவதாக நுகர்வோர்கள் விசனம் தெரவித்து வருகின்றனர். பழைய விலையிலுள்ள பொருட்கள் புதிய விலைக்கு விற்கப்படுவதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் நுகர்வோர்பாதுகாப்புஅதிகாரசபை இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.(பா)

# இந்திய இலக்கிய அமைப்பின் சொற்பொழிவு



கொழும்பு பல்கலைக் கழகத்தில் இந்திய கல்வி நிலையத்தின் 10 ஆவது ஆண்டு விழா மற்றும் பாரதத்தின் 75ஆவது சுதந்திர நினைவு ஆண்டு விழாவையொட்டி நடத்தப்படும் 'இந்திய இலக்கிய அமைப்பின் மாதாந்த சொற்பொழிவில் நான்காவது சொற்பொழிவு இன்று பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்ட பீடத்தில் நடைபெறும்.

"தமிழ் இலக்கியத்தின் நேர்த்தி" என்ற

06

# இரசாயன உரம், கிருமிநாசினி விரைவில் இறக்குமதி

### விவசாயிகளுக்கு அமைச்சர் ஜானக வக்கும்புர செய்தி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இரசாயன உரம் மற்றும் விவசாய உற்பத்திக்குத் தேவையான கிருமி நாசினி வகைகளை விரைவாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார். அரசாங்கமானது இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள இரசாயன உரம் மற்றும் விவசாய உற்பத்திக்குத் தேவையான கிருமி நாசினி வகைகளை மீண்டும் இறக்குமதி செய்வதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. அது தொடர்பில் கடந்த

06

# இலங்கைக்கு அவசரகால கடன் உதவி வழங்க இந்தியா கோரிக்கை

### IMF, உலக வங்கியுடன் பேச்சு



இலங்கையை குறைந்த வருமானம் பெறும் நாடாக தற்காலிகமாக அறிவிக்குமாறும், உக்ரைனுக்கு வழங்கியது போன்று அவசரகால கடன் உதவிகளை வழங்குமாறும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடன் மறுசீரமைப்பை எளிதாக்குவதற்கும், இலங்கையின் கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்க பலதரப்பு உதவிகளைப் பெறுவதற்கும் இந்த தரம் குறைப்பு உதவும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான சமீபத்திய சந்திப்பின் போது இந்தப் பரிந்துரைகளை முன்வைத்ததாக இந்திய ஊடகச் செய்திகள் வெளியிட்டுள்ளன.

06

ச.தொ.ச கிளைகளில்

# அத்தியாவசிய பொருட்கள் இன்றி மக்கள் ஏமாற்றம்

நாடு முழுவதுமுள்ள லங்கா ச.தொ.ச கிளைகளில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு இன்னும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

ச.தொ.ச கிளைகளுக்குச் சென்று அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வந்த போதும் பொருட்கள் இல்லாததால் வெறுங்கையுடன் வீடுகளுக்குச் செல்ல நேரிட்டதாக அறிய வருகிறது.

நாடு முழுவதுமுள்ள லங்கா ச.தொ.ச கிளைகளில் பெரும்பாலா



னவை பொருட்களின்றி வெறுமையாக காணப்படுவதாக அறிய வருகிறது.

இதேவேளை, சில பல்பொருள் வர்த்தக நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு அரிசி வழங்கப்படுவதாகவும் அறிய வருகிறது. (பா)

# பேலியகொட மீன்சந்தை செயற்பாடுகள் பாதிப்பு

அரசாங்கத்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஒரு நாள் வேலை நிறுத்தம் காரணமாக பேலியகொடை மீன் சந்தையின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாக பேலியகொடை மீன் சந்தை வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.

பேலியகொடை மீன் சந்தைக்கு நாளாந்தம் 200 லொறிகளுக்கு மேல் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மீன்கள் எடுத்து வருகின்ற போதும் நேற்று 15 லொறிகள் மாத்திரமே வந்ததாகவும் அவர் தெரிவித்தார். தினமும் காலையில் மீன் சந்தைக்கு அதிகளவான வியாபாரிகள் மீன்களை கொள்வனவு செய்வதற்கு வருகை தந்த போதிலும், நேற்று அவர்களின் வருகை மிகவும் குறைவாகவே காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மீன் ஏற்றிச் செல்லும் மட்டுப்படுத்தப்பட்ட லொறிகள் அதிகாலையிலேயே வந்ததாகவும், மிகக் குறுகிய காலத்தில் விரைவாக விற்றுத் தீர்ந்துவிட்டதாகவும் அவர் கூறினார். (பா)

# நிர்மாணப்பணிகளை 03 மாதங்களுக்கு இடைநிறுத்துமாறு மக்களிடம் கோரிக்கை

குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு நிர்மாணப்பணிகளை இடைநிறுத்துமாறு இலங்கை தேசிய நிர்மாண சங்கம் பொது மக்களிடம் கோரியுள்ளது.

சீமெந்து விலை அதிகரிப்பு காரணமாக நிர்மாணத்துறையை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்தார். நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சீமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி உள்ளூர் சீமெந்து மூடை ஒன்றின் விலை 400 ரூபாவினாலும் வெளிநாட்டு சீமெந்து மூடை ஒன்றின் விலை 500 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டது. தற்போது உள்ளூர் சீமெந்து மூடை ரூ.2,750க்கும் வெளிநாட்டு சீமெந்து மூடை ரூ.2,850 ஆகவும் உயர்ந்துள்ளது.

இந்நிலைமையால் நிர்மாணத்துறை வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார். நாட்டில் 80 வீதமான நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 27

## குறள் தரும் சிந்தனை



இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்

முயற்சி செய்வதில் அக்கறையின்றிச் சோம்பேறிகளாய் வாழ்பவர்கள் இகழ்ச்சிக்கு ஆளாவார்கள்.

# அதிபர், ஆசிரியர்கள் முன்பாக உள்ள பாரிய பொறுப்பு

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைவது கல்வியாகும். அவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் கல்வியை ஆசிரியர்கள்தான் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றனர். அதுவே உலகளாவிய நடைமுறை. கல்வியின் ஊடாக உலகம் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு ஈடாக வேறெந்த துறையின் மூலமும் உலகம் வளர்ச்சி அடையவில்லை.

அந்த வகையில் இந்நாட்டின் 42 இலட்சம் மாணவர்களுக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் பணியில் இரண்டு இலட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக இந்நாட்டின் ஆசிரியர்களும் அதிபர்களும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படக் கூடிய வகையிலான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர். இதன் விளைவாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மாத்திரமல்லாமல் அவர்களது எதிர்காலமும் பாதிப்படையவே செய்யும். கற்றறிந்த சமூகத்தை உருவாக்கும் பொறுப்பை சுமந்துள்ள ஆசிரியர்களும் அதிபர்களும் ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்கள் போன்று தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது நியாயப்படுத்தக் கூடியதல்ல.

உலகில் முன்னேற்றமடைந்துள்ள எந்தவொரு சமூகத்தை எடுத்துப் பார்த்தாலும் அச்சமூகத்தின் பின்புலமாக கல்வி அமைந்திருப்பதைக் கண்டு கொள்ள முடியும். அதனால் இந்நாட்டின் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களும் அதிபர்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் விளைவாக எதிர்கால சந்ததியினரின் கல்வியில் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும். கல்வி துறையினரின் தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டின் கல்வி வீழ்ச்சிக்கு நிச்சயம் துணைபுரியும். இதன் விளைவாக ஏற்படக் கூடிய பாதிப்புக்களும் தாக்கங்களும் எளிதில் சீரமைக்கக் கூடியவையாக இருக்காது. அவை நாட்டை பின்னடைவுக்கே இட்டுச் செல்லும்.

கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சம் காரணமாக கடந்த இரண்ட வருடங்களாகப் பாடசாலைகள் ஒழுங்கு முறையாக இயங்கவில்லை. அதனால் மாணவர்களின் கல்வியில் தாக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் இந்நாட்டு எதிர்கால சந்ததியினரின் கல்வி நலன்களை முன்னிலைப்படுத்தி பாடசாலைகளை வழமை போன்று முன்னெடுக்கும் நடவடிக்கை கடந்த சில மாதங்களாகத்தான் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றது.

இதேவேளை கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்த முன்னெடுத்த நடவடிக்கைகளின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடிக்கு நாடு தற்போது முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதன் காரணத்தினால் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட எல்லா பொருட்களது விலைகளும் அதிகரித்துள்ளன. இது நாட்டில் எல்லா மட்டத்தினர் மத்தியிலும் தாக்கங்களை ஏற்படுத்தி மக்களை அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கியுள்ளது.

இருந்த போதிலும் எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி, ஆசிரியர்களும், அதிபர்களும் தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் தருமாறு கோரி கடந்த திங்களன்று சுகவீனத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர். அத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு ஐந்து நாட்கள் கூட கடந்திராத சூழலில், நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் நேற்று முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கைக்கும் அவர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர். இதனால் பாடசாலைகளில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் வரவு பெரிதும் வீழச்சியடைந்து காணப்பட்டது.

எதிர்வரும் மே மாதம் பிற்பகுதியில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று இவ்வருடத்தின் பிற்பகுதியில் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையும் நடத்தப்பட உள்ளது.

ஆனால் கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் காலப்பகுதியில் பாடசாலைகள் பல மாதங்கள் மூடப்பட்டு இருந்ததால் அந்தந்த வருடத்திற்குரிய பாடவிதானங்கள் கற்பித்து நிறைவு செய்யப்படாதுள்ளன. இந்த நிலையில் அது குறித்து கவனம் செலுத்தி பொதுப் பரீட்சைகளுக்கு ஏற்ப மாணவர்களைத் தயார்படுத்த வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய பொறுப்பாகும்.

இவ்வாறான பொறுப்பு தமக்கு முன்பாக இருந்து கொண்டிருக்கும் சூழலில் ஆசிரியர்களும் அதிபர்களும் அடிக்கடி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது ஆரோக்கியமானதல்ல. அந்நடவடிக்கைகள் எதிர்கால சந்ததியினரின் கல்வியை நிச்சயம் பாதிக்கவே செய்யும். அதனால் நாட்டின் கல்வி வீழ்ச்சி அடையக் கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே நாட்டினதும் எதிர்கால சந்ததியினரதும் கல்வி நலன்களை முன்னிலைப்படுத்தி ஆசிரியர்களும் அதிபர்களும் செயற்பட வேண்டும். தவறும் பட்சத்தில் இந்நாட்டின் கல்வி வீழ்ச்சி அடைவதைத் தவிர்க்க முடியாது. அதுவே பெற்றோரினதும் கருத்தாக உள்ளது. அதனால் ஆசிரியர்களும் அதிபர்களும் தம் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk



# தியவன்னா பாராளுமன்ற கட்டட தொகுதிக்கு 40 வருடங்கள் பூர்த்தி

இலங்கை பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டேயில் உள்ள தற்போதைய கட்டடத்துக்கு கொண்டு வரப்பட்டு இன்றுடன் (29) நாற்பது வருடங்கள் பூர்த்தியடைகிறது.

காலிமுகத்திடலில் அமைந்திருந்த பாராளுமன்றக் கட்டடத்தில் போதிய இடவசதி இன்மையால் அதனை வேறொரு இடத்துக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் பின்னர் கோட்டே பிரதேசத்தில் பாராளுமன்றத்துக்குப் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கமைய 1979ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேசத்தில் காணப்பட்ட 16 ஏக்கர் சிறிய தீவில் புதிய பாராளுமன்றக் கட்டடத்துக்கான பணிகள் ஆரம்பமாகின.

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்களின் வழிகாட்டிலின் கீழ் அப்போதைய பிரதமர் ஆர்.பிரேமதாச அவர்களினால் இக்கட்டடத்தைக் அமைக்கும் பணிகள் கண்காணிக்கப்பட்டன. இதற்கமைய ஜெஃப்ரி பாவா அவர்கள் பிரதான கட்டடக் கலைஞராகத் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய கட்டடத்தை அமைப்பதற்கான பணிகளை ஜப்பானிய நிறுவனமொன்று பொறுப்பேற்றிருந்தது. இலங்கையின் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட பாராளுமன்ற கட்டடத்தின் அனைத்து கட்டடக்கலை நடவடிக்கைகளிலும் தேசியத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் 1982ஆம் ஆண்டு முடிவடைந்ததுடன், 1982 ஏப்ரல் 29ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பகுதியில் அமைக்கப்பட்ட புதிய பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதற்கமைய அதுவரை காலிமுகத்திடலிலிருந்த பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே புதிய கட்டடத்துக்கு கொண்டு வரப்பட்டது.

புதிய பாராளுமன்றக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே நகரம் இலங்கையின் நிர்வாகத் தலைநகரமாக மாறியது. நாகை மரங்களை வரிசையாகக் கொண்ட பிரதான சாலையின் ஊடாகத் தற்போதைய பாராளுமன்ற வளாகத்துக்கான நுழைவு அமைந்துள்ளது. பாராளுமன்றம் பொதுமக்களுடன் நெருக்கமாக இருப்பதற்கு ஏதுவாக புரதான கட்டடக் கலை வடிவமான ‘அம்பலம்’ என்ற கருத்துருவாக்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட நிர்மாணங்களை இங்கு காணலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களை சந்திப்பதற்கான இடமாக இது அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் நீர் நிரம்பிய குளங்களையும் காண முடியும்.





பாராளுமன்றத்தின் பிரதான கதவுகளுக்கு அருகில் கலாநிதி மஞ்சு ஸ்ரீ சித்திரக் கலைஞரினால் வரையப்பட்ட சுவரோவியங்களைப் பார்க்க முடியும். சபா மண்டபத்தின் பிரதான கதவு செப்பு மற்றும் வெள்ளி மென்பூச்சைக் கொண்டிருப்பதுடன், இதில் புராதன கல்வெட்டுப் பாணியில் இலங்கை அரசியலமைப்பின் பாயிரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. செவ்வக வடிவான சபாமண்டபம், முழுக்கட்டடத்தினதும் மையப்பகுதியில் இரண்டு மாடிகளின் உயரத்தை உள்ளடக்குகின்றது. மன்னர்கள், விகாரைகள் மற்றும் கோறளைகளினது 18 கொடிகள் காட்சியளிக்கின்றன. மேலும் சபாமண்டபத்தின் மத்தியில் தொங்கவிடப்பட்டுள்ள வெள்ளி மென்பூச்சைக் கொண்ட பாரிய மின்விளங்கு சபா மண்டபத்துக்கு அபிமானத்தைச் சேர்க்கிறது.

எச்.ஈ.ஜனகாந்த சில்வா...
பணிப்பாளர் சட்டவாக்க சேவைகள்/
பணிப்பாளர் தொடர்பாடல் (பதில்)
இலங்கை பாராளுமன்றம்

# ரமழானில் கற்றுக் கொண்டவை, அதன் சிறப்புகள்; மாணவர்களின் திறமை மேடையேற்றல் நிகழ்வு

அட்டாளைச்சேனையில் உள்ள ஹன்லழத் பின் ஆமிர் ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெறும் குர்ஆன்மத்ரஸாவின் மாணவர்களினால் புனிதமிக்க ரமழான் மாதத்தினை சிறப்பிக்கும் வகையிலும், இம்மாதத்தில் சிறார்கள் பெற்ற அறிவினை வெளிக் கொணரும் வகையிலுமான சிறப்பு நிகழ்வு (2022.04.28) மஸ்ஜிதில் இடம்பெற்றது.





அஷ்ஷேஹ் எம்.ஏ.முபீன் (ஷஹ்வி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவ, மணவிகள் தங்களது திறமைகளை மிகச்சிறப்பாக வெளிக்காட்டியிருந்தனர்.

மேலும் மத்ரஷாவின் பொறுப்பாசிரியர்களாக கடமையாற்றியிருந்த றம்ஸான் (ஸஹ்வி), லாபீர் ஷரப் (ஸலபி) ஆகியோரின் பூரணநெறிப்படுத்தலில் குறித்த சிறார்கள் தத்தமது ஆற்றல்களை திறம்பட வெளிக்கொணர்வதற்காக பயிற்றுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி நிகழ்விற்கு பிரதம அதிதியாக என்.எம். அப்துல் அஹத்(ஷர்க்கி), அகமது இப்றாஹீம் (ஷர்க்கி) மற்றும் அஷ்ஷேஹ் றிழ்வான் (தௌஹீதி) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந்த அதிதிகள் முன்னிலையில் மாணவர்களின் திறமை மேடையேற்றப்பட்டது விசேட அம்சமாகும்.





ரமழானின் மாண்புகள், லைலத்துல் கத்ரின் சிறப்புகள் மற்றும் குர்ஆன் ஓதுதல்லின் சிறப்பு, பெருநாள் தினத்தின் ஒழுங்குகள் உட்பட பல தலைப்புகளில் மாணவர்கள் தத்தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர். அத்துடன் குர்ஆன் ஓதுதல் போட்டி நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் தமது திறமைகளை மிகச் சிறப்பாக வெளிக்காட்டிய சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஏனைய மத்ரஸா மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

றிசாத் ஏ. காதர்...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# வடக்கின் கணித இமயமாக திகழ்ந்த நல்லையா மாஸ்டர்

வடமராட்சியில் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் பல தமிழ், முஸ்லிம் பொறியியலாளர்கள், பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள், கட்டடக்கலை நிபுணர்கள், தொழினுட்பவியலாளர்கள், படவரைஞர்கள், விரிவுரையாளர்கள், கணித ஆசான்கள் என கணிதச் சந்ததிகளை உருவாக்கிய முக்கிய கர்த்தாக்களில் ஒருவராய்த் திகழ்ந்த ஆசிரியர் நல்லையா அவர்கள் பிரிந்த செய்தி துயரம் மிக்கதொன்றாகும். அவர் கடந்த 26 ஆம் திகதி காலமானார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூத்த ஒலிபரப்பாளர் வி. ஏ. கபூர் அவர்களின் மருமகனும் கிழக்கிலங்கையின் மூத்த பொறியியலாளருமான ஏ எம் ஜுனைட் நல்லையா மாஸ்டரின் மாணவர். அக்காலத்தில் யாழ் நெல்லியடியில் தங்கியிருந்து படித்தவர்களில் ஒருவர்.

அவர் நல்லையா மாஸ்டர் பற்றி ஒருமுறை சொல்லும் போது, பிரயோக கணிதத்தை விளங்க வைத்ததில் அவரது அந்தக் குரலுந்தான் காரணம் என்றார்.

ஒரு காகிதத்துண்டோ புத்தகமோ இல்லாமல் வெறுங்கையுடன் வகுப்புக்குள் நுழைந்து கணித வினாக்களை மனதிலிருந்து கொணர்ந்து மாணவர்களுக்கு விளங்க வைக்கும் நல்லையரின் ஆற்றல் அவரை பல மாணவர்களைப் பல்கலைக் கழகம் அனுப்பி வைத்த பெருமைக்குரிய ஆசான் ஆக்கிற்று.

பாடத்திட்டத்தை ஒழுங்காக முடிக்கிறாரோ



இல்லையோ என்ற விமர்சனங்கள் இருந்த போதும் அவரிடம் படித்தவை யாவுமே தம்மைச் சித்திபெற வைக்க உதவியதாகச் சொல்லும் மாணவரும் அவரது கற்பித்தல் திறனின் சான்றாய்த் திகழ்ந்தனர்.

பிரயோக கணிதம், தூயகணிதம் என்பவற்றைப் படிப்பதென்றால் அப்படிக் குரல் இருப்பதும் அவசியம் போலும் என்பதை அவரிடம் படித்த மாணவர்களின் சித்திப் பெறுபேறுகள் காட்டின. பழைய சயன்ஸ் சென்ரருக்கு இரசாயனம் படிப்பித்த சண்முகதாஸ் மாஸ்டர் ஸ்கூட்டரிலும், கே.வி. என் ( நடராஜா) மாஸ்டர் மொறிஸ் மைனர் கார் ஒன்றிலும், ஆர்.பி மாஸ்டர் பிரப்பங்கூடையை முன்னாற் பொருத்திய சைக்கிளிலும் வருவதை சிறுவனாகவிருந்த காலத்தில் கண்ட நினைவுகள் வருகின்றன.

சயன்ஸ் சென்ரர் பின்பு அமரர் மகாலிங்கம் மாஸ்டர் வீடடுக்குப் போனது. நல்லையர் பிரயோக கணிதத்தையும் தூய கணிதத்தையும் படிப்பித்தார். 'வெக்டர்' வேலாயுதம், நல்லையா மாஸ்டர் ஆகியோர் சயன்ஸ் சென்ரரின் கணிதத் தூண்கள்.

நல்லையா மாஸ்டர் சயன்ஸ் சென்ரர் நிருவாகியான அமரர் இராஜரத்தினத்தை அதன் ஆரம்பகாலம் முதல் அதில் பணியாற்றியதால் நன்றியுடனும் நட்புடனும் இறுதிவரையும் மதித்து வந்தார். நவீன கணிதத்திற்கு வடக்கில் புகழ்பெற்ற சிதம்பரப்பிள்ளை மாஸ்டரும் சயன்ஸ் சென்ரரின் புகழுக்குக் காரணமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுற்றாடலில் எமது வளர்ச்சியில் வகிபாகங்களாக நாம் கண்ட ஆசான்கள் அமைகின்றனர். அவர்கள் கட்டாயம் எமக்குப் படிப்பித்துத்தான் அந்த வகிபாகத்தை ஆற்ற வேண்டியதில்லை என்பதற்கு நல்லையா மாஸ்டர் ஓர் உதாரணம்.

மகத்தான கணிதப் பரம்பரைகளை உருவாக்கிய பெருமனிதர் என்பதை நினைவு கூருவதே அவருக்கு அஞ்சலி செய்வதிலுள்ள சிறப்பாகும். போர்க்காலத்தில் ஒரு புறம் போராளிகளாக மாணவர்கள் அணிதிரண்ட காலத்தில்,

மறுபுறம் பல்கலைக்கழகங்களுக்கு பல மாணவர்களை அனுப்பிக் கொண்டிருந்த கல்விப் போராளி அவர் என்பது உண்மை.

எம்.வரதராஜன்...
(நியூசிலாந்து)

# ஸகாதுல் பித்ர்: நோன்பு, சமூகமும் சார்ந்த கடமை!

ஸகாதுல் பித்ர் ரமழானில் வசதியுள்ள அனைவர் மீதும் கடமையான ஒரு வணக்கமாகும். தனக்கும் தனது பொறுப்பிலுள்ளவர்களின் பெருநாள் தேவைக்கு மேலதிகமாக யாருக்கெல்லாம் வசதி இருக்கிறதோ அவர்கள் அனைவரும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஸதககதுல் பித்ர், ஸகாது ரமழான் போன்ற பெயர்களால் மாத்திரமல்லாமல் ஸகாதுல் பதன் (உடல் சம்பந்தப்பட்ட ஸகாத்) என்றும் கூட இது அழைக்கப்படுகிறது. ஏனெனில் நபரை வைத்தே இந்த ஸகாத் விதியாகின்றது. ஹிஜ்ரி இரண்டில் நோன்புடன் சேர்த்தே இதுவும் விதியாக்கப்பட்டது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஸகாதுல் பித்ர் நோன்பாளியின் வீணான செயல்கள், தீய வார்த்தைகளுக்கு குற்றப்பரிகாரமாகவும் ஏழைகளுக்கு உணவாகவும் அமைகிறது' என்று கூறினார்கள்.

இரண்டு பிரதான நோக்கங்களுக்காகவே ஸகாதுல் பித்ர் விதியாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த ஹதீஸ் சுட்டிக்காட்டுகிறது. ஒன்று நோன்பாளி சார்ந்தது. நோன்பாளியை வீண் மற்றும் ஆபாசப் பேச்சுக்களிலிருந்து தூய்மைப் படுத்துவதாகும். மற்றையது சமூகம் சார்ந்தது. பெருநாள் தினத்தில் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதனால் இந்த தர்மம் ஏழைகளுக்கு உணவாகவும் அமைகிறது.

ஷவ்வால் தலைப்பிறை கண்டு நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன்னர் இந்த ஸகாதுல் பித்ரை வழங்கி விட வேண்டும். அப்போது தான் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். 'எவர் அதைப் பெருநாள் தொழுகைக்கு முன்பு செலுத்துகிறாரோ அது ஏற்றுக் கொள்ளப்பட்ட தர்மமாகும் (ஸகாதுல் பித்ர்). எவர் அதை தொழுகைக்குப் பின்பு செலுத்துகிறாரோ அது தர்மங்களில் ஒரு தர்மமாகும்.' (ஆதாரம்: அபூ தாவூத், இப்னு மாஜா)

பொதுவாக பிரதான உணவாக உட்கொள்ளக்கூடியதானியவகையிலிருந்தே ஸகாதுல் பித்ர் வழங்கப்படுவதனால் எமது நாட்டைப் பொறுத்த வரை மக்கள் பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய அரிசியே (2.4 கிலோ கிராம்) ஸகாதுல் பித்ராக கொடுக்கப்படுவது வழமை.

ஸகாதுல் பித்ரை தானியமாக கொடுப்பதற்கு பகரமாக அதன் பெறுமதியை பணமாக கொடுப்பது பற்றி இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் அதற்கும் அனுமதியுண்டு என்பதே சமகால இஸ்லாமிய அறிஞர்களின் நிலைப்பாடாகும்.

ஸகாதுல் பித்ரின் நோக்கங்களில் ஒன்று பெருநாள் தினத்தில் இல்லாதோருக்கு கொடுத்து உதவுவதாகும். அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் அவர்கள் பெருநாளை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடும் நிலையை ஏற்படுத்துவதும் இக் கடமையின் நோக்கமாகும்.

நாட்டின் தற்போதைய சூழலை நாம் எல்லோரும் அறிவோம்.பொருட்கள் தட்டுப்பாடு, பணவீக்கம், பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். குறிப்பாக ஏழைகள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். நடுத்தர வர்க்கத்தினரும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே, இம்முறை ஸகாதுல் பித்ரை திட்டமிட்டு முறையாக வழங்க வேண்டும். தேவையுடையவர்களை சரியாக இனங்கண்டு அவர்களைத் தேடிச்சென்று அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

பள்ளிவாசல்கள், சமூக அமைப்புக்கள். ஊர்மட்ட ஸகாத் நிறுவனங்கள், சங்கங்கள் தத்தமது ஊர்களில் இதனை கூட்டாக நிறைவேற்றுவது குறித்து சிந்தித்து செயலாற்றுவது அவசியம். இதன் ஊடாக தேவையுடையவர்கள் எவரும் விடுபடாத வகையில் அவற்றை வழங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

அதேநேரம் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த தேவையுடையவர்கள் தமது தேவைகள், கஷ்டங்களை வெளியே சொல்லாது, பிறரிடம் கேட்காது இருந்து விடுவர். அத்தகையோரையும் சரியாக இனங்கண்டு அவர்களது இடங்களுக்கு தேடிச்சென்று ஸகாதுல் பித்ரை வழங்குவதன் மூலம் சகலரும் மகிழ்ச்சிகரமாகப் பெருநாளைக் கொண்டாடும் நிலை ஏற்படும்.

தற்போதைய சூழலில் ஸகாதுல் பித்ரை பெற தகுதியானவர்களின் எண்ணிக்கை சில சமயம் கடந்த காலங்களை விடவும் பல மடங்கு அதிகரித்திருக்கும் வாய்ப்பும் உள்ளது. எனவே, ஸகாதுல் பித்ர், அளவை விட கூடுதலாக கொடுக்கும் விடயத்திலும் தனவந்தர்கள், வசதியுடையவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

நபித்தோழர்களும் அவ்வாறு அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கும் அளவு போதாது எனக்கருதிய போது அதன் அளவை விட அதிகமாக கொடுத்திருக்கிறார்கள். முஆவியா (ரழி) அவர்கள் மதீனாவின் பேரீத்தம் பழத்தின் நிறையானது ஷாமின் கோதுமைக்கு நிகராக இருக்க வேண்டுமானால் கொடுக்கும் அளவைக்கூட்ட வேண்டும் என்று கருதிய போது அபூ ஸஈத் அல் குத்ரீ(ரழி) அவ்கள் அந்த மாற்றத்தை செய்ய அனுமதி வழங்கினார்கள்.

ஸஹாபாக்கள் சமூகக் காரணிகளைக் கவனத்தில் கொண்டு இக்கடமையை நிறைவேற்றியுள்ளார்கள் என்பதற்கு இச்சம்பவம் தகுந்த சான்றாகும்.

எனவே, கடமையான ஸகாதுல் பித்ரை முறையாகவும் உரியவர்களுக்கும் தற்போதைய காலசூழலைக் கருத்திற் கொண்டு திட்டமிட்ட அடிப்படையிலும் வழங்கி மகத்தான கூலியை வல்ல இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

அபூ அர்வா ...

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# லைலதுல் கத்ர் கண்ணியமிக்க இரவு

ஐந்து வசனங்களையுடைய 'அல் கத்ர்' என்ற அத்தியாயம் அல் குர்ஆனில் 97வது அத்தியாயமாக இடம் பெற்றுள்ளது. இச்சூறா 'லைலதுல் கத்ர்' எனும் மகத்தான ஒரு இரவு குறித்துப் பேசுகின்றது. இந்த இரவில்தான் முதல் முதலாக உலகின் வானுக்கு அல்குர்ஆன் ஒட்டுமொத்தமாக அருளப்பட்டது. பின்னர் காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப சிறுகச் சிறுக 23 வருட காலப்பகுதியில் முழுக் குர்ஆனும் நபி(ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு அருளப்பட்டது.

இந்த இரவு ஆயிரம் மாதங்களை விட மேலானதாக அல்லாஹ்வினால் ஆக்கப்பட்டுள்ளது. இவ்விரவில் வானவர்களும் அவர்களின் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களும் பூமிக்கு இறங்குகின்றனர். இதுதான் இந்த அத்தியாயத்தின் சாரம்சமாகும்.

'மகத்துவமிக்க இரவில் இதை நாம் இறக்கினோம்' எனக் குறிப்பிட்டிருப்பதன் ஊடாக அல்குர்ஆன் அருளப்பட்டதே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய அத்தியாயத்தில் முதல் முதலில் அருளப்பட்ட ஐந்து வசனங்களைக் கொண்ட இக்ரஃ அத்தியாயம் அமையப் பெற்றிருப்பது நல்லதொரு தொடர்பாக உள்ளது.

இக் குர்ஆன் ஒட்டுமொத்தமாக ஒரே இரவில் உலகின் முதல் வானுக்கு அருளப்பட்டது. அதனையே இவ்வசனம் கூறுகின்றது. இவ்விரவு குறித்து அல் குர்ஆன், 'இதை பாக்கியம் நிறைந்த இரவில் நாம் அருளினோம். நாம் எச்சரிக்கை செய்வோராவோம் (44:37) என்றும் கூறியுள்ளது. அந்த இரவை முபாரக்கான இரவு என்றும், கத்ருடைய இரவு என்றும் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

'ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான வழி காட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை – தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும். எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கிறாரோ (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்வரும் நாட்களில் நோற்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்)'. (2:185) என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. எனவே, அல்குர்ஆன் அருளப்பட்ட மகத்துவமான அருள் பொதிந்த இரவு எவ்வித சந்தேகமுமின்றி ரமழான் மாதத்தில்தான் இடம்பெற்றுள்ளது. இதில் இரண்டாம் கருத்துக்கு எள்ளளவும் இடம் கிடையாது.

'கத்ர்' என்றால் கண்ணியம், மகத்துவம் என்ற கருத்துக்கும் இடம்பாடுள்ளது. அதே நேரம், ஒரு காரியத்தைத் திட்டமிட்டுத் தீர்மானிப்பதையும் இது குறிக்கும். இந்தக் கருத்தில் தான் கழா கத்ர் என நாம் குறிப்பிடுகின்றோம். இவ்விரவுக்கு கத்ருடைய இரவு என ஏன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது என்பதற்கு இஸ்லாமிய அறிஞர் ஒருவர்

'இந்த இரவில் தான் அடுத்த வருடத்திற்கான உலக மனித செயற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன' எனக் குறிப்பிடுவதுடன் அதற்கு 'அதில் முக்கியமான ஒவ்வொரு விஷயங்களும் தீர்மானிக்கப்படுகிறது'.(44:04) என்ற வசனத்தையும் சான்றாகக் குறிப்பிட்டுள்ளார். படைப்பினங்களைப் படைப்பதற்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கழா கத்ர் தீர்மானிக்கப்பட்டு விட்டது. எனினும், இந்த இரவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 'கத்ர்' மீண்டும் இவ்விரவில் தீர்மானிக்கப்படுவதாகவே கருத முடியும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

'மகத்துவமிக்க இரவு என்றால் என்னவென உமக்கு எப்படித் தெரியும்? மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது'. அந்த இரவின் சிறப்புக் குறித்த முதல் செய்தி இதுவாகும். அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. அதாவது சுமார் 83 வருடங்களை விட சிறப்பு வாய்ந்ததாகும். ஏற்கனவே கூறிய அருள் பொதிந்த இரவு என்பதும் இதற்குப் பொருந்திப் போகின்றது. ஒரு இரவு 83 வருடங்களை விட அதிக சிறப்புப் பெறுவது என்பது மிகப்பெரிய அருளாகும். ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது என்பதற்கு அவ்விரவில் புரியப்படும் நல்லமல்கள் ஏனைய மாதங்களில் செய்யும் அமல்களை விடவும் சிறந்தது என்ற கருத்தை முஜாஹித், அம்ரிப்னு கைஸ் போன்றோர் குறிப்பிடுகின்றனர்.

மேலும் இந்த ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவை இம்மாதத்திற்கு அல்லாஹ் வழங்கியதற்கு இந்த உம்மத்தின் ஆயுட்காலம் முன்னைய கால மக்களின் வாழ்வுக் காலத்தை விடக் குறைந்தது என்பது முக்கிய காரணமாகும். இம்மகத்துவமிக்க இரவு ரமழான் மாதத்தில் வரும். என்றாலும் எத்தினத்தில் வரும் என்பது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அந்த இரவு எது என்பதை அல்லாஹ் மறைத்து விட்டான் என்றே கூற வேண்டும். அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் 'எனக்கு லைலதுல் கத்ர் காட்டப்பட்டது. பின்னர் அது மறக்கடிக்கப் பட்டு விட்டது. அதனை ரமழான் கடைசிப் பத்தின் ஒற்றைப் படையான இரவுகளில் தேடிக் கொள்ளுங்கள்' என கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

'நான் லைலதுல் கத்ரை அறிவிக்க வந்தேன். உங்களில் இருவர் சர்ச்சைப் பட்டுக் கொண்டிருந்தனர். அது எனக்கு மறக்கடிக்கப் பட்டுவிட்டது. அது உங்களுக்கு நல்லதாகவே இருக்கும்' (ஆதாரம்: முஸ்லிம்)

அந்த இரவு, நபியவர்களுக்கு மறக்கடிக்கப்பட்டு விட்டது. அது எது என்பதை மக்கள் அறியாமல் இருப்பதே நல்லதாகும். எனினும் நபி(ஸல்) அவர்கள் அந்த இரவை அடைவதற்காகக் கடைசிப் பத்து நாட்கள் பூராகவும் முயற்சித்துள்ளார்கள் என ஏராளமான ஹதீஸ்கள் வந்துள்ளன. அதனால் நபிகளாரின் வழிமுறையைப் பின்பற்றி அம்மகத்துவ மிக்க இரவை அடைந்து கொள்வதற்காக இம்மாதத்தின் இறுதிப் பத்து நாட்கள் பூராகவும் நாமும் முயற்சிக்க வேண்டும்.

அதற்கான பொறுப்பு சலருக்கும் உள்ளது. அவ்விரவில் நின்று வணங்கும் போது முன்னைய பாவங்கள் அனைத்தையும் அழித்து விடும். அதனால் இறுதிப் பத்து நாட்கள் முழுவதும் முயற்சிசெய்து அந்தப் பாக்கியத்தை அடைந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் வானவர்களும் ரூஹும் (ஜிப்லீல் (அலை) அவர்கள்) அதில் தமது இறைவனின் கட்டளைப்படி ஒவ்வொரு காரியத்துடனும் இறங்குகின்றனர். இங்கே அந்த இரவின் முக்கிய சிறப்பம்சம் கூறப்படுகின்றது. அத்துடன் அவர்கள் அல்லாஹ்வின் அடுத்த வருடத்திற்கான கட்டளைகளையும் சுமந்து வருகின்றனர். இதைத்தான் 44:04 வசனமும் கூறுகின்றது. அடுத்து கத்ர் உடைய இரவு என்பதும் இந்த அர்த்தத்திற்குப் பொருத்தமாகவுள்ளது.

ஸலாம் இது வைகறை வரை இருக்கும் எனக் கூறியபடி இந்த சூறா முடிவடைகின்றது. அந்த இரவு காலை வரை அமைதி பொருந்தியதாக இருக்கும் என்றும் அன்று இரவு முதல் பஜ்ர் வரை வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நல்லடியார்களை மலக்குகள் காணும் போதெல்லாம் ஸலாம் கூறுவார்கள் (ஸஃபுல் ஈமான்) என்றும் இதற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. அதனால் அவ்விரவில் மலக்குகளின் ஸலாத்தைப் பெற நாடுவோர், அவ்விரவைப் பயன்படுத்தி மறுமையில் ஸலாத்தையும் பாதுகாப்பையும் அமைதியையும் அடைய விரும்புவோர் அவ்விரவில் இஸ்லாம் கூறும் இனிய இபாதத்துக்களில் ஈடுபட்டு இறையருள் பெற்றிட உறுதி கொள்ளட்டும்.

பிந்த் இஸ்மாயீல் ...

# நோன்பு பெருநாளின் தாற்பரியம்

எம்மை வந்தடைந்துள்ள புனித ரமழான் அருளையும், பாவமன்னிப்பையும், நரக விடுதலையையும் எமக்கு அள்ளிச் சொரிந்ததோடு ஒரு ஆன்மிக வசந்தத்தை இன்றைய பொருளாதார நெருக்கடிச் சூழலிலும் எமக்கு ஏற்படுத்தியிருப்பதை மறுக்க முடியாது. இந்நாட்டில் தற்போது அசாதாரண சூழ்நிலை உருவெடுத்துள்ள போதிலும் இங்கு வாழும் முஸ்லிம்கள் தமது புனித நோன்பின் மூலம் சுயகட்டுப்பாட்டையும், பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

ரமழான் நோன்பு கற்றுத்தரும் ஆன்மிக விழுமியங்கள், ஒழுக்கப் பண்பாடுகள் உயர் முன்மாதிரிகள் பெருநாளிலும் அதனைத் தொடர்ந்துவரும் நாட்களிலும் பின்பற்றப்பட வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். நோன்பு கற்றுத்தந்த தர்மங்கள், உபகாரங்கள் என்பனவற்றில் ஸகாதுல் பித்ரா என்ற அமல் முன்னணி வகிக்கின்றது. அதன் சட்டதிட்டங்கள் குறித்து இச்சமயம் அறிந்து கொள்வது பயன்மிக்கதாகும்.

### சிறப்பு

இப்னு உமர் (ரழி) அவர்களின் அறிவிப்பொன்றில் நபி (ஸல்) ரமழானில் ஸதககதுல் 'பித்றா'வை பர்ழாக ஆக்கியுள்ளர்கள் என்றும், மற்றொரு அறிவிப்பில் ரமழானின் நோன்பு வானத்திற்கும், பூமிக்கும் மத்தியில் (அந்தரத்தில்) தொங்க விடப்பட்டதாக இருக்கும். ஸதககதுல் பித்றாவின் மூலமே உயர்த்தப்படும் என்றும் பதிவாகியுள்ளது.

**ஆதாரம் (புகாரி, முஸ்லிம், தர்கீப்)**

### நோக்கம்

இக்கடமையை நிறைவேற்றுவதன் மூலம் பாவத்திலிருந்து பரிசுத்தமடைதல், நோன்பில் ஏற்பட்ட சிறுதவறுகள் மன்னிக்கப்படல், ஏழை எளியோர்களுக்கும், வசதியற்றோர்களுக்கும் உதவுதல், தானதர்மம் வழங்குதல், முஃமின்களை சங்கைப்படுத்தல் போன்ற இன்னோரென்ன பல அம்சங்கள் பொதிந்திருப்பதாலே இஸ்லாம் இதனைக் கடமையாக்கியுள்ளது.

### யார் மீது கடமை

ஆண்கள், பெண்கள், சிறியோர், பெரியோர் என்ற பாகுபாடின்றி ஒவ்வொரு குடும்பத் தலைவனும் தனக்காகவும், தனது பராமரிப்பின் கீழ் உள்ளோருக்காகவும் பெருநாள் இரவுக்கும், பகலுக்கும் உணவு, உடை, வீடு போன்ற செலவுகளுக்கு போதுமான அளவுபோக, மீதமான இருக்கும் பொருளில் இது அனைவருக்கும் கடமையாகும், ரமழான் கடைசி நோன்பன்று (ஷவ்வால் பிறை தோன்ற முன்) பிறந்த சிசுவுக்காகவும் ரமழான் கடைசி நோன்பன்று (ஷவ்வால் பிறை தோன்றிய பின்) மரணித்தவருக்காகவும் கொடுக்க வேண்டும்.

### கொடுக்க வேண்டிய அளவு

தான் வசிக்கும் நாட்டு மக்கள் பிரதான உணவாக உட்கொள்ளும் (தானிய) பொருளையே கொடுக்க வேண்டும். எமது நாட்டைப் பொறுத்த வரையில் அரிசியையே பிரதான உணவாகக் காணப்படுவதால் அதனையே வழங்க வேண்டும். உமி நீக்கி நிறைந்த இரண்டு கொத்து (2300கி) ஏறக்குறைய 2/ 14 கிலோ அளவாகும். (நிறையில் சில உலமாக்களிடம் கருத்து வேறுபாடு உண்டு)

### எப்போது கொடுப்பது

இதனை புனித ரமழானின் ஆரம்பத்திலிருந்தே வழங்கலாம். ஆனால் கடைசி நோன்பன்று சூரியன் மறைந்ததிலிருந்து பொருநாள் தொழுகையை நிறைவேற்ற முன்னர் கொடுப்பதே சிறந்தது. தொழுகையை விட பிற்படுத்துவது, (மக்ரூஹ்) விரும்பத்தகாததாகும். சூரியன் மறைந்த பின்னும் தக்க காரணமின்றி கொடுக்காமல் பிற்படுத்துவது கூடாது.பிற்படுத்தியோர்கள் தாமதிக்காமல் நிறைவேற்றுவது பர்ளாகும். மேற்படி ஸக்காத்துல் பித்ராவை ஸக்காத் பெறத் தகுதியுடையவர்களுக்கே வழங்க வேண்டுமென பெரும்பான்மையான இஸ்லாமிய அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். பித்ராவை தானியமாகவோ, பணமாகவோ, உலர் உணவுப் பொதியாகவோ சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப விநியோகிக்கலாம் எனவும் பெரும்பான்மையான உலமாக்கள் குறிப்பிடுகின்றனர்.

## நோன்புப் பெருநாளில் நபி (ஸல்) அவர்களின் வழிமுறை

(பிறை கண்டது முதல்)

- தக்பீர் சொல்லுதல்.
- குளித்தல்.
- பெருநாள் தொழுகைக்கு முன் பேரீத்தம் பழமும் உணவும்
- ஈதுல் பித்ர் நேரகாலத்துடன் திறந்தவெளியில் தொழுதல்.
- ஒரு பாதையால் சென்று மறு பாதையால் திரும்புதல்.
- வாழ்த்துக் கூறுதல்.
- பெருநாள் தத்துவம்
- மரணித்தவர்களின் கப்ருகளைத் தரிசித்தல்/ துஆ செய்தல்.
- உறவினர்களைத் தரிசித்தல்.
- ஆகுமான விளையாட்டுக்களில் மகிழ்ச்சியான, மார்க்கம்
- அனுமதிக்கும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.

### பெருநாள் தலைப்பிறை

ஷவ்வால் தலைப்பிறையைத் தீர்மானிப்பதன் ஒழுங்குகள் ஒவ்வொரு ரமழானிலும் பிறை 29 முடிவுறும் போது நோன்புப் பெருநாளைக்கான தலைப்பிறையைத் தீர்மானிப்பதில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் என்ற மூன்று அமைப்புக்களும் நீண்ட காலமாகப் பங்களிப்புச் செய்து வருகின்றன. ஆனாலும் அண்மைக்காலம் முதல் ஒவ்வொரு பெருநாள் நெருங்கும் போதும் தேசிய பிறையா? சர்வதேசப் பிறையா? என்ற சர்ச்சைகள் சமூகத்துக்குள் தோன்றி பெருநாள் கொண்டாடுவதில் பல குழுக்கள் உருவாவது நோன்பு கற்றுத் தந்த பாடத்திற்கு எதிர்மாறானதாக அமைவதாகக் கருதப்படுகின்றது.

'நபியே கூறுங்கள் நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். உங்களது தூதருக்கும் கட்டுப்படுங்கள், உங்களது பொறுப்புதாரிகளுக்கும் கட்டுப்படுங்கள்' என்று அல்குர்ஆன் வழிகாட்டியுள்ளது. அதற்கமைய பிறையைத் தீர்மானிப்பதற்கான பொறுப்புதாரிகளான மேற்படி மூன்று அமைப்புக்களோடும் இணக்கமாகவும், ஒற்றுமையாகவும் எமது உணர்வுகளை வெளிப்படுத்தி ஒரே நாளில் நோன்புப் பெருநாளை ஒற்றுமையாகக் கொண்டாட முயற்சிப்போம்.

அஷ் ஷெய்க் பளீல் மௌலானா
(நளீமி) எம்.ஏ. சிரேஷ்ட விரிவுரையாளர்
ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், சம்மாந்துறை

# நம்பிக்கையில்லா பிரேரணையில் நான் கையெழுத்திட மாட்டேன்

## SJB பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம



அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் தான் கையெழுத்திடப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி, அரச தலைவராக செயற்படும் இறுதித் தருணம் வரை, அரசாங்கத்தின் எந்தவித செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லையென குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் தமது நிலைப்பாட்டை அறியப்படுத்தியுள்ளார். அவநம்பிக்கை பிரேரணையிலோ அல்லது இடைக்கால அரசாங்கம் தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள யோசனையிலோ தாம் கையொப்பமிடவில்லை அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய இலக்கிய... (03 ஆம் பக்கத் தொடர்)

தொனிப்பொருளில் இந்த சொற்பொழிவு இடம்பெறும். ருஹுணு பல்கலைக்கழகத்தின் சிங்கள கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்மிக்க ஜயசிங்க இந்த சொற்பொழிவை நிகழ்த்துவார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சாஸ்திரிய தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் முகமாக இந்த சொற்பொழிவு நடத்தப்படவுள்ளது. சிரேஷ்ட பேராசிரியர் உப்புல் ரஞ்சித் ஹேவாவித்தானகேயின் வழிகாட்டலின் கீழ் இது நடத்தப்படுகிறது. Zoom மற்றும் You tube/ Facebook ஊடாகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரசாயன உரம், கிருமிநாசினி... (03 ஆம் பக்கத் தொடர்)

அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்தவகையில் விரைவாக அவற்றை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உரம் மற்றும் கிருமிநாசினி வகைகள் தட்டுப்பாடு காரணமாக விவசாய நடவடிக்கைகளை கைவிட்டுள்ள விவசாயிகள் உடனடியாகவே தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்ட விவசாய அமைச்சர், உரம் உள்ளிட்ட விவசாய உற்பத்திப் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார். (ஸ)

## இந்தோனேசியாவிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

ஞாயிற்றுக்கிழமை வந்தடையும். சுகாதார அமைச்சின் வேண்டுகோளைத் தொடர்ந்து, இந்தோனேசிய அதிகாரிகளும் மருந்து மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் துறையும் பத்து நாட்களில் ஒன்றிணைந்து உதவிகளை விரைவாக அனுப்புவதை உறுதிசெய்யும் வகையில் பொருட்களை நன்கொடையாக வழங்கியதுடன், அதன் நீண்டகால நெருங்கிய நட்பைக் கருத்தில் கொண்டு இலங்கைக்கு தேவைப்படும் நேரத்தில் ஆதரவளிப்பதில் மகிழ்ச்சியடைந்ததாக தூதுவர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

இந்தோனேசியா அரசாங்கம் மனிதாபிமான உதவிகளை தாராளமாக வழங்கியமைக்கு இலங்கை அரசாங்கத்தின் பாராட்டுக்களை தூதுவரிடம் தெரிவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இது இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய நட்புறவின் தெளிவான வெளிப்பாடாகுமெனக் குறிப்பிட்டார். இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நெருங்கிய உறவுகள் மற்றும் சர்வதேச அரங்கில் கடல் பிரச்சினைகள் மற்றும் செயன்முறைகளில் ஒத்துழைப்பையும், உலக அரங்கில் பிரச்சினைகளை புறநிலையாக தீர்க்க அணிசேரா இயக்கத்தில் நெருக்கமாக பணியாற்றுவதையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

## முள்ளிவாய்க்கால் நினைவு... (03 ஆம் பக்கத் தொடர்)

இது இந்த நாட்டில் ஏற்பட்ட பாரிய மாற்றமாகும். இந்நிலையில் தமிழ் மக்களின் மனங்களில் புரையோடிப்போயுள்ள யுத்த வலிகளை நினைவுகூர்ந்து யுத்தத்தால் மரணித்த தமிழர்களை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டு அம் மக்களுக்காக அஞ்சலி செலுத்த அழைக்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

## தனியார் பஸ்கள்...

கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பஸ் தொழிற்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், பஸ் தொழிற்துறையால் நாளாந்தம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டாலும் அரச ஊழியர்கள் சம்பளம் பெற்றுக்கொள்வதாகவும், நாளாந்த சம்பளத்தில் தங்கியுள்ள பஸ் தொழிலில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு நாள் சேவையில் இருந்து விலகுவது அவர்களின் குத்தகை கொடுப்பனவுகளை பாதிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாமலுக்கு எதிரான...

இந்த வழக்கு நேற்று (28) கொழும்பு மேல் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறக்கப்பட்டிருந்தது.

இதன்போது நாமல் ராஜபக்ஷ உட்பட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜபக்ஷ உட்பட ஆறு சந்தேக நபர்களுக்கு எதிராக 30 மில்லியன் ரூபாவை நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்ததன் காரணமாக சட்டமா அதிபரால் பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## டொலர் ரூ.500 வரை...

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சீர்செய்வது குறித்து கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய கடன் நிலை, அரசாங்கம் தனது கடமைகளில் தவறியிருப்பதையே காட்டுகிறது என சுட்டிக்காட்டிய அவர், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு புதிய வேலைத்திட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினார். நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதை அரசாங்கம் இப்போது உணர்ந்து கொள்வது மிகவும் அவசியமானது என காமினி விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரச்சினைகளுக்கு...

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியை வீட்டுக்கு போகுமாறு கூறுவதும் பிரதமரை வீட்டுக்கு போகுமாறு கூறுவதும் நேற்று இன்று நடக்கும் விடயம் அல்ல. அன்று ஜே.ஆர். ஜெயவர்தனவை கொலை செய்வதாக கூறினார்கள். இவ்வாறான கருத்துக்களுக்கு குழப்பமடைய தேவையில்லை. எனினும் தலையிலுள்ள நோய்க்கு உடலில் மருந்து போட்டு பயனில்லை.

ஜனாதிபதியோ பிரதமரோ எதிர்க்கட்சித் தலைவரோ நேரடி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறுதான் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியும். எந்த பிரச்சினைகளையும் மூடிமறைத்து பயனில்லை. ஒரு நோய்க்கு பதிலாக வேறொரு நோய்க்கு மருந்து வழங்குவதில் பயனில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## இலங்கைக்கு அவசர... (03 ஆம் பக்கத் தொடர்)

அண்மைக்காலமாக அரசியல் பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கைக்கு இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.இந்த நிலையிலே இலங்கை சார்பில் இந்தியா இவ்வாறான முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. (பா)

## நன்கொடைகளை...

தெரிவித்துள்ளது. இந்த அந்நிய செலாவணி நன்கொடை மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்று மத்திய வங்கி தனது பேஸ்புக் பக்கத்தில் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அந்நியச் செலாவணி பெறுகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடு என்பவற்றை வெளிப்படைத் தன்மையை பேணுவதற்காக மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றையும் மத்திய வங்கியின் ஆளுநர் நியமித்துள்ளார்.

நன்கொடைகள் தொடர்பான தகவல்களை fdacc@cbsl.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது 076 83 15 782 என்ற இலக்கத்திற்கு WhatsApp க்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## சுரேன், சாந்தவை நீக்கினால்...

அரசாங்கத்தில் உள்ள சகல கட்சிகளுக்கும் விசேட கூட்டத்திற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள நிலையில் இதில் கலந்து கொள்ள போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

சாந்த பண்டார மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் இராஜாங்க அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கப்படும் வரை இந்த கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

சகல கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற ரீதியில் முழுமையாக இணக்கம் தெரிவிப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அதன்படி பிரதமர் உட்பட அமைச்சரவை பதவி விலகியவுடன் சர்வ கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் கடிதம் ஊடாக தெரியப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாட இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ள விசேட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி, அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்களுக்கும் ஆளும் தரப்பின் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இந்த கலந்துரையாடலானது இன்றைய தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிங்கள நடிகை அனுஷா

முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த அவர், சிகிச்சைப் பலனின்றி நேற்று உயிரிழந்ததாக மருத்துவமனை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இறக்கும் போது அவருக்கு வயது 47 ஆகும்.

அவர் சில காலமாக நோய்வாய்ப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## துறைமுக,விமான நிலைய...

இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் குறைந்தளவான பணியாளர்களே நேற்று பணிக்கு சென்றதாக துறைமுக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று காலை மாத்திரம் 5 சரக்கு கப்பல்கள் வந்தன.

அதில் உள்ள கொள்கலன்களை தரையிறக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் வழமை போன்று நேற்று காலை முதல் சேவையில் ஈடுபட்டன.

## ஜனாதிபதியின் அழைப்பு...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்க, நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில், கொள்கை ரீதியில் தாம் இணங்குவதாக அரசாங்கத்தில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி எழுத்துமூலம் அறியப்படுத்தியுள்ளார்.

தற்போதைய பிரதமரும், அமைச்சரவையும் பதவி விலகியதன் பின்னர் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

இதற்கமைய, முதல் கட்டமாக வெள்ளிக்கிழமை 29ஆம் திகதி, முற்பகல் வேளையில், ஜனாதிபதி மாளிகையில் விசேட கூட்டத்திற்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். புதிய அரசாங்கத்தின் கட்டமைப்பு, பொறுப்பு வழங்கப்படும் நபர்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய காலஎல்லை என்பன குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

அந்த கலந்துரையாடலுக்கான அழைப்பு எமக்கு கிடைத்துள்ள போதும், அதற்கு செல்வது தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று குறிப்பிட்டார்.

இதேவேளை, கலந்துரையாடலுக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தாம் பங்கேற்கவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் எனும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

## நாடளாவிய ரீதியில்...

பாடசாலைக்களுக்கு சமுகமளிக்கவில்லை என்றும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இலங்கை போக்குவரத்து சபையின் 80 வீதமான பஸ்கள் மற்றும் சில தனியார் நிறுவனங்கள், துறைமுகம், விமான நிலையம் போன்றன வழமை போன்று இயங்கியதால் கொழும்பில் வீதிகள் வெறிச்சோடிய நிலை காணப்படவில்லை. நேற்றைய தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்த தொழிற்சங்க ஆர்ப்பாட்டப் பேரணி லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தில் கூடி அங்கிருந்து அரசாங்கத்திற்கு எதிராக தொடர் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் காலிமுகத்திடல் பகுதிக்கு சென்றதால் கொழும்பின் முக்கியமான பகுதிகளில் நேற்று போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டன. போக்குவரத்து நெரிசல் மற்றும் போக்குவரத்துக்கான தடை காரணமாக அலுவலகங்களுக்கு செல்வோர் மற்றும் அன்றாட அலுவல்களுக்காக கொழும்புக்கு வரும் பெரும்பாலான மக்கள் நீண்டதூரம் நடந்தே செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதேபோன்று நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களிலும் இதேபோன்று போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டதுடன் அன்றாட அலுவல்களை மேற்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்ததாக அந்த பகுதிகளிலிருந்து தெரியவந்தது.

அதேவேளை, 50க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் நேற்றைய தினம் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டதால் அரச சேவைகளுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. ஒருநாள் சேவைகளை மேற்கொள்ளும் குடிவரவு குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்து மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தந்துள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்ட பேரணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் துறைமுக அதிகார சபையின் செயற்பாடுகள் வழமைபோன்று இடம்பெற்றதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஆரப்பாட்டங்களுக்கு மத்தியிலும் மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள் இடம்பெற்றதுடன் அரச, தனியார் போக்குவரத்து சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டளவில் நேற்று இடம்பெற்றதைக் காணக்கூடியதாகவிருந்தது. (ஸ)

## இடைக்கால அரசாங்கம்;...

திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தானும் பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையினரும் மஹிந்த ராஜபக்ஷவின் படத்தை காட்டித்தான் பாராளுமன்றத்திற்கு வந்ததாகவும் அவர் கூறினார்.

எனவே, பொதுஜன பெரமுன ஆட்சி அமைப்பதில் தான் உறுதியாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் பிரதிநிதிகளுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவது மற்றும் அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுயாதீனமாக செயற்பட்டு வரும் எம்.பிக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை கிரிக்கற்றுக்கு...

பயிற்றுவிப்பாளர் Anton Roux நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இலங்கை A அணி, வளர்ந்து வரும் அணி மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு புதிய பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை A அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பயிற்றுவிப்பாளர்கள் பின்வருமாறு,

உதவி பயிற்சியாளராக திலின கண்டம்பி, துடுப்பாட்ட பயிற்சியாளராக மலிந்த வர்ணபுர, பந்துவீச்சு பயிற்சியாளர்களாக சஜீவ வீரகோன் மற்றும் உபுல் சந்தன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை வளர்ந்து வரும் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக ருவான் கல்பகே நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பயிற்றுவிப்பாளர்கள் பின்வருமாறு,

உதவி பயிற்சியாளராக ருவின் பீரிஸ், பந்துவீச்சு பயிற்சியாளராக தர்ஷன கமகே, துடுப்பாட்ட பயிற்சியாளராக தம்மிக்க சுதர்சன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

19 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் தலைமைப் பயிற்சியாளராக ஜெஹான் முபாரக் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பயிற்றுவிப்பாளர்கள் பின்வருமாறு,

உதவி பயிற்சியாளர் மற்றும் துடுப்பாட்ட பயிற்சியாளராக சம்பத் பெரேரா,பந்துவீச்சு பயிற்சியாளர்களாக சமில கமகே மற்றும் கயான் விஜேகோன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சகல கட்சிகளையும் உள்ளடக்கி...

கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறும் கூட்டத்தில் பங்கேற்கும் கட்சித் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் தமது கட்சிகளின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை வந்து சமர்ப்பிக்குமாறும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்து கட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஏற்கனவே ஜனாதிபதி பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். அதன்படி, இன்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் அந்தக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது. நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாணும் வகையில் சர்வகட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி கடந்த இரண்டு தினங்களுக்கு முன் இணக்கம் தெரிவித்திருந்தார். தமது இணக்கப்பாட்டை அவர் சகல கட்சிகளுக்கும் தெரிவித்திருந்தார்.

அதன்படி பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை இராஜினாமா செய்தபின் அமைப்பதற்கு உத்தேசித்துள்ள சர்வகட்சி அரசாங்கத்தின் செயற்பாட்டுக்காலம், அதன் பொறுப்புக்கள், பொறுப்புகளை பெற்றுக்கொள்ளும் நபர்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதி கட்சித் தலைவர்களுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் மற்றும் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுயாதீன குழுவில் உள்ளடங்கும் கட்சித் தலைவர்கள் ஆகியோருடனான பேச்சுவார்த்தை இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

அந்தவகையில் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் தமது கருத்துக்கள் மற்றும் யோசனைகளை எடுத்துவரும்படி ஜனாதிபதி அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, நாட்டில் நிலவும் சமூக மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாணும் வகையில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் மகாநாயக்க தேரர்கள், கர்தினால் உள்ளிட்ட மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

அந்த வேண்டுகோளையடுத்து சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் தாம் கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக கட்சித் தலைவர்களுக்கு கடிதம் மூலம் அவர் அறிவித்திருந்தார்.

அதனையடுத்து அதுதொடர்பில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான பேச்சுவார்த்தை நேற்றைய தினம் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

அதேவேளை, ஆளும்கட்சி மற்றும் சுயாதீனமாக செயற்படும் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளதுடன் அதனையடுத்து ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி அதுதொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் .(ஸ)

## அத்தியாவசிய சேவைகள் விநியோக...

மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகள் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு முன்னிலையில் நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதில் கலந்துகொண்டு பேசும்போதே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது நிலவிவரும் எரிசக்தி, மின்சக்தி மற்றும் சமையல் எரிவாயு தொடர்பான பிரச்சினைகளின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, வர்த்தக மற்றும் சமுர்த்திஅபிவிருத்தி அமைச்சர் செஹான் சேமசிங்க, அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு முன்னிலையில் நேற்று (28) அழைக்கப்பட்டிருந்தனர்.

தற்போதைய நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

இந்தியன் ஒயில் நிறுவனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து விலைச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்தவிருப்பதாகவும், இது தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர இங்கு தெரிவித்தார்.

இந்த இரு அமைச்சுக்களுக்கும் புதிய செயலாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், தற்போதைய நிலைமையை முகாமைத்துவம் செய்து எதிர்வரும் சில நாட்களில் இப்பிரச்சினைகளை வெற்றிகொள்ள அதிகாரிகளுடன் இணைந்து முடிந்தளவு முயற்சித்து வருவதாகவும் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு அமைச்சர் கூறினார். அத்துடன், இந்த நிலைமைக்கான காரணங்கள் மற்றும் நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் அடங்கிய விரிவான அறிக்கையொன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விநியோகத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க முத்துராஜவல முனையம் 24 மணித்தியாலங்களும் இயங்குவதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலைமையிலான பணியாளர் குழாம் முடிந்தளவு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரிக்கான கொடுப்பனவு நேற்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய அடுத்த செப்டெம்பர் மாதம் வரை தேவையான நிலக்கரி காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், விமான சேவைகள் மற்றும் மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு அவசியமான சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் இதற்கு கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை நாட்டின் மின்சாரக் கட்டமைப்புக்குள் இணைப்பதற்கு எதிராகக் காணப்படும் தடைகள் தொடர்பில் குழுவின் உறுப்பினர்கள் விசேட கவனம் செலுத்தியிருந்தனர். இதற்கமைய சர்வகட்சிக் குழுவொன்றை உருவாக்கி அதன் ஊடாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பான சட்டத்திருத்தத்தை எதிர்காலத்தில் கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும், இதன் ஊடாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை மின்சாரக் கட்டமைப்பில் இணைக்க முடியும் என்றும் மின்சார சபையின் தலைவர் இங்கு தெரிவித்தார்.

வர்த்தகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் செஹான் சேமசிங்கவும் தற்போதைய எரிவாயுத் தட்டுப்பாடு குறித்து உரையாற்றினார். இந்திய கடன் வசதி மற்றும் உலக வங்கி கடனுதவியின் கீழ் எரிவாயு விநியோகம் சாதாரண நிலைக்கு கொண்டு வரப்படும் எனவும் எதிர்வரும் காலங்களில் எரிவாயு விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதே போன்று அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவில் உருவாக்க வேண்டியது தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும் நேற்றைய இந்த கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

# 'LankaPay Technnovation Awards 2022' இரண்டு சிறப்பு விருது DFCC வங்கிக்கு

இலங்கையின் முதன்மையான வர்த்தக வங்கிகளில் ஒன்றான DFCC வங்கி, அண்மையில் இடம்பெற்ற 2020/2021 ஆம் ஆண்டிற்கான LankaPay Technnovation Awards 2022 விருதுகள் நிகழ்வில் இரண்டு புதிய விருதுகளைத் தனதாக்கியுள்ளது. வங்கியானது 'Best Common ATM Enabler of the Year under category B' மற்றும் 'Bank of the Year for Financial Inclusivity under category C' ஆகிய அங்கீகாரங்களைத் தனதாக்கியுள்ளது. அனைவரையும் உள்வாங்கும் வகையிலான கடன் வசதிகளை முன்னெடுத்து வருகின்றமை, நிதிச் சேவைகள் துறையில் அதன் உயர் செயல்திறன் காரணமாக CEFTS, SLIPS மற்றும் பொதுவான ATM புழக்கத்தை ஊக்குவிக்கும் நடைமுறை பரிவர்த்தனைகள் காரணமாக இந்த அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



புத்தாக்கமான டிஜிட்டல் மயமாக்கல் அடிப்படையிலான நடைமுறைகளைப் பயன்படுத்துவதில் அனைத்து பங்குதாரர்களுக்கும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை இந்த அங்கீகாரங்கள் புலப்படுத்துகின்றன. நான்காவது முறையாக இடம்பெற்றுள்ள LankaPay Technnovation Awards நிகழ்வானது இலங்கையின் முன்னோடி கொடுப்பனவு தொழில்நுட்ப புத்தாக்க விருதுகள் நிகழ்வாகும்.

# பிள்ளைகளிடத்தில் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கம்

**இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த த சில்வா**



பகல்நேர சிறுவர் பராமரிப்பு மத்திய நிலையங்களுடன் கூடிய ஆரம்ப குழந்தைப்பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களை நாடு பூராவும் அமைக்கும் வேலை திட்டத்தின் ஒரு கட்டம் பதுரலிய பிரதேச செயலாளர் காரியாலய வளாகத்தில் 27 ஆம் திகதி மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் அடிப்படைக் கல்வி, பாடசாலை அபிவிருத்தி வசதிகள் மற்றும் கல்வி சேவை இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப குழந்தை பருவ அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான பகல்நேர சிறுவர் பராமரிப்பு மத்திய நிலையத்துடன் கூடிய 26 ஆரம்ப குழந்தை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்கள் நாடு பூராவும் அமைக்கப்படவுள்ளதோடு மத்திய நிலையமொன்றிற்காக 15 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான அனைத்து வசதிகளும் பகல் நேர பராமரிப்பு மத்திய நிலையம் மற்றும் ஆரம்ப குழந்தை பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களில் அமைந்துள்ளதோடு நாடு பூராவும் உள்ள பிள்ளைகளுக்கு சமமான அனுமதியை பெற்றுக் கொடுப்பது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

தொழில் ரீதியாக ஆசிரியராகவும் இப்பூமியில் காலை ஊன்றியுள்ள மனிதனாகவும் சிறுவர்கள் தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தி சரியான கல்வியை பெற்றுக் கொடுப்பது தனது கடமை மற்றும் பொறுப்பு என இராஜாங்க அமைச்சர் இங்கு மேலும் குறிப்பிட்டார். பிள்ளைகள் நாட்டின் பெறுமதி வாய்ந்த வளம் மற்றும் நாட்டின் எதிர்காலமும் ஆவார்கள்.

அதனால் பிள்ளைகளிடையே நல்ல கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தான் எதிர்பார்த்துள்ளதாகவும் எவ்வித தடங்கல்கள் ஏற்பட்டாலும் அனைத்து பிள்ளைகள் மற்றும் மகளிருக்காக தமது அமைச்சின் ஊடாக முன்னெடுத்துச் சென்ற திட்டங்களை தொடர்ந்தும் செயல்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.


## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு

322

**வெற்றிடங்கள்**
மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

கட்டிடம் மட்டும் தளத்திற்கு கார்பெண்டர்களுக்கான காலியிடம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு கொள்ள குவேந்திரன் 0773960218.
028129

Repeat Your Ad For Better Offers

திகதி 27.04.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 4745 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,997,630.00 — ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 5 7 5 4 6 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,787,910.00

**ராசீ சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 0054 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,683,520.00 — இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 09 10 13 52 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,018,524.20

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1239 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,100,820.00 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 7 2 2 6 4 6 — அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,105,832.40

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 775 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,231,900.00 — வெற்றி இலக்கினம் Z — வெற்றி இலக்கங்கள் 26 50 63 73 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,042,825.60

**கோடி 24 + Mega POWER மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1093 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,846,520.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 249,361,490.00 — N 11 03 35 56 79 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 மே 04ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 97,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122H055 | LKA18222K049 | LKA36423E051 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 30,000 | 27,500 | 97,500 |

ஏல விற்பனைத் திகதி : 2022 மே 04
தீர்ப்பனவுத் திகதி : 2022 மே 06
வழங்கப்படும் திகதி : 2022 மே 06
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 மே 04, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## எரிசக்தி அமைச்சு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### நீடிப்பு அறிவித்தல்

**B/26/2022 - CPC வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல் (தலைமை அலுவலகம், பிளவர் வீதி, தேர்ஸ்டன் வீதி மற்றும் கொலன்னாவ விவசாய இரசாயன பிரிவு)**

**B/27/2022 - அநுராதபுரம் மற்றும் சீனக்குடா விடுமுறை விடுதிகள், அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பில் அமைந்துள்ள CPC பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல்**

**B/28/2022 - மாத்தறை விடுமுறை விடுதி மற்றும் காலியில் அமைந்துள்ள CPC பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல்**

**B/29/2022 - குருநாகல், பதுளை, பேராதனை மற்றும் கேகாலையில் அமைந்துள்ள CPC பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல்**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-05-02ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது இப்போது 2022-05-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 63 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022-07-11ஆம் திகதி வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (2022-08-08ஆம் திகதி வரை)

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமிற்றி அவ்வாறேயிருக்கும்.

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455331,**
**தொலைநகல்: 011-5455424**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தத்தின் படி 1961 ஆம் ஆண்டின் 29 D ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

PEOPLE'S BANK
**மக்கள் வங்கி**

## காணிநிலம் , காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மதிப்பு மிக்க வர்த்தகச் சொத்தின் ஏல விற்பனை

அனுமதி பெற்ற நில அளவையாளர் H. சிரிபட்டன என்பவரால் தயாரிக்கப்பட்டு 07.11.2001 ஆய்வு செய்யப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 1896 இல் லொட் C என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்ட களுவிதரங்க வட்ட அல்லது படுவட்ட அல்லது மெதகொரட்டுவ என அழைக்கப்படும் நிலமானது, தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், தெற்கு கிருவபத்துவவில் தங்காலை பிரதேச செயலகப்பிரிவில்), தங்காலை மாநகர சபை எல்லைக்குட்பட்ட, மெடக்கெட்டிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மெடக்கெட்டிய தங்காலையின் ஹம்பாந்தோட்டை வீதியில் இல.106 இல் அமைந்துள்ளது. கூறப்பட்ட லொட் இலக்கம் C காணி,

வடக்கெல்லை : திட்ட இலக்கம் 1896 இல் குறிப்பிடப்பட்ட லொட் B மற்றும் D ஆலும்
கிழக்கெல்லை : ஹம்பாந்தோட்டை வீதியில் இல.106/1 இல் குறிப்பிடும் டந்துகே வட்ட அல்லது வீரகஹவட்டவாலும்
தெற்கெல்லை : ஹம்பாந்தோட்டை வீதியில் இல.02 இல் குறிப்பிடும் A. A. தீரசேகர நொத்தரிசுவின் நிலத்தாலும்
மேற்கெல்லை : தங்காலையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையிலான பிரதான வீதியாலும்

சூழப்பட்டிருக்கிறது. நிலவரைப்பட இலக்கம் 1896 இலக்க நிலவரைப்படத்துக்கேற்ப, காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக காணியின் பரப்பளவு பதின்மூன்று புள்ளி ஒன்று பேர்ச்சஸ் (A-0 R-0 P-13.1) ஆகும். தங்காலை நிலப்பதிவில் G 01/111 இல் பதியப்பட்டது.

**மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,**
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில்
**வெள்ளிக்கிழமை 20 மே 2022 அன்று மு.ப 10.30 இற்கு**
**மக்கள் வங்கி -பிராந்திய அலுவலகம் (ஹம்பாந்தோட்டை),**
**146A, மாத்தறை வீதி, தங்காலையில் இரண்டாம் மாடியில் விற்பனை செய்கிறேன்.**

**சொத்துக்கான வழி**
தங்காலை நகர பிரதான சுற்றுவட்ட சந்தியிலிருந்து, தங்காலை ஹம்பாந்தோட்டை பிரதான வீதியில் 250 மீட்டர் தூரம் சென்று குறித்த இடத்தை அடையலாம். பிரதான வீதியின் வலப்புறத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான அறிவிப்புகளுக்காக**
மேலதிக தகவல்களிற்கு 2020 ஜூலை மாதம் 10 ஆம் திகதி அரச வர்த்தமானி மற்றும் டெய்லி நியூஸ், தினமின, மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பனமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்)
(4) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(5) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி
(6) கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய தலைமைக்காரியாலயம், ஹம்பாந்தோட்டைக்கு, இல 146A மாத்தறை வீதி, தங்காலை எனும் முகவரியில் 2 ஆம் மாடியில் அமைந்துள்ள தங்காலை கிளையில் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்த முடியவில்லை எனில் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையின் 10% இனை பறிமுதல் செய்ய வங்கிக்கு உரிமை உள்ளதுடன் சொத்தை மறுவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்- ஹம்பாந்தோட்டை,
தங்காலை கிளை 2 ஆம் மாடி, இலக்கம் 146A, மாத்தறை வீதி, தங்காலை.
தொலைபேசி. 047-2220902, 047-2220903

முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை இரத்துச் செய்யவும்/நிறுத்தவும் வங்கிக்கு உரிமை உண்டு.

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதோரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com
DK's AUCTIONS To Professionally Serve the Nation

லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்

**தொடர்பு : KEL/ADM/PROC/2022(47)**

களனி கிளை அலுவலகம், CSCS மற்றும் பேலியகொட காணிக்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக உத்தேச சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனு ஆவணங்களை, ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 1,000.00 செலுத்துவதன் பேரில் வேலை நாட்களில், மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை களனி, தளுகம, கண்டி வீதி, இல. 262, லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் நிர்வாகப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022.04.29 முதல் 2020.05.11 வரை வழங்கப்படும்.

குறிப்பு நோக்கங்களுக்காக, வரைவு விலைமனு ஆவணங்கள் (விலைமனுவுக்கு அல்லாத) www.promise.lk அல்லது www.leco.lk என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள், பொறியிடப்பட்ட உறையின் கீழ், லங்கா இலட்க்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட், பிரதம பொறியியலாளர் (கிளைகள்) இற்கு முகவரியிடப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்களை 2022 மே 12ம் திகதி பி.ப. 2.00 இற்குப் பிந்தாமல் கீழேயுள்ள முகவரியின் 2ஆம் மாடியில் உள்ள, கேள்விப் பெட்டியில் வைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில், மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.

LECO

**பிரதம பொறியியலாளர் (கிளைகள்)**
**லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்**
**கிளை அலுவலகம்,**
**இல. 262, கண்டி வீதி, தளுகம.**
**களனி.**
**தொலைபேசி : 011-2917746, 011-2910129**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை புகையிரத சேவைகள்

**PROCUREMENT FOR THE SUPPLY OF 5,000 Nos. LESS HIGH CONCRETE SLEEPERS TO HAPUTALE YARD AND 5,000 Nos. LESS HIGH CONCRETE SLEEPERS TO HEEL-OYA YARD TO SUIT EN 45 E 1 RAILS FOR CHECK RAILED TRACK IN UPPER DISTRICT.**

**SRI LANKA RAILWAYS – IFB No.: SRS.F.7831**

1. இலங்கை புகையிரத சேவைகளின் மேல் மாவட்டத்தில் check railed track இற்காக EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருந்தும் தன்மையில் அப்புத்தளை திறந்த வெளிக்கு பாரம் குறைந்த கொன்கிறீட் 5,000 எண்ணிக்கையான சிலீப்பர்களையும் ஹீல்-ஓய திறந்த வெளிக்கும் பாரம் குறைந்த கொன்கிறீட் 5,000 எண்ணிக்கையான சிலீப்பர்களையும் வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து கொழும்பு இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2022.04.29 ஆம் திகதியிலிருந்து 2022.05.23 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
**புகையிரத பெறுகை உப-திணைக்களம்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**
**தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11)2436818**
**தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044**
**மின்னஞ்சல்: srs.slr@gmail.com**
**இணையதளம்: www.railway.gov.lk**

4. கடந்த (05) ஐந்து வருடங்களில் விலைமனுதாரர் 5,000 எண்ணிக்கைக்கு மேலான கொங்கிறீட் சிலீப்பர்களை இலங்கை புகையிரத சேவைகளுக்கு வழங்கியிருத்தல் வேண்டும் அல்லது முன்தயாரிக்கப்பட்ட கொங்கிறீட் விட்டங்களை 50 மில்லியன் ரூபாவிற்கு மேலாக வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவிற்கு மேலான பெறுமதியுள்ள கொங்கிறீட் தூண்களை வழங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றிற்கான விலைப்பட்டியல்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2022.04.29 ஆம் திகதியிலிருந்து 2022.05.23 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகை கட்டணமாக 27,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, புகையிரத பெறுகை உபதிணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யயப்படலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 1,500,000 ரூபாவாகவிருப்பதுடன் நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இலங்கையில் செயற்படுவதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றாகவுமிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் 2022.05.24 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**பெறுகை உபதிணைக்களத்தின் அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.**
**Ref, No.: SRS/F.7831**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஏப்ரல் 29
வெள்ளிக்கிழமை

# தொழிற்சங்க போராட்டம்: வடக்கு முடக்கம்











**யாழ்.விசேட, கரவெட்டி தினகரன், வவுனியா விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்**

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலக கோரி பல தொழிற் சங்கங்கள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையால் வடக்கில் பொதுமக்களின் அன்றாட செயற்பாடு பாதிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ மற்றும் தற்போதைய அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி நேற்றைய தினம் வியாழக்கிழமை நாடளாவியரீதியில் பல தொழிற்சங்கங்கள் பணி புறக்கணிப்பு போராட்டத்தை அறிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனால் யாழ்ப்பாண குடாநாட்டின் இயல்பு நிலை முற்றாக செயலிழந்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு தனியார் மற்றும் அரச போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றது.

பாடசாலைகள் மற்றும் வங்கி சேவைகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு, புகையிரத சேவை தபால் சேவைகள் என்பன முற்றாக செயலிழந்து காணப்பட்டன.

அத்தோடு யாழ்.நகரத்தின் வீதிகளில் பொது மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்பட்டதுடன், யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் விதமாக மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (28) அரச வங்கிகள், தபாலகம் உட்பட பல அலுவலகங்கள் மூடப்பட்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகள் பெரும்பாலானவை நடைபெறவில்லை என்பதுடன் சில பாடசாலை மாணவர்களின் வரவும் குறைந்து காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

அதேநேரம் பஸ் சேவைகள் வழமைபோல் இடம்பெற்றுவருகின்ற அதேநேரம் வர்த்தக நிலையங்களும் வழமைபோல் இயங்கி வருவதை அவதானிக்கமுடிந்தது. தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அரச வங்கிகள் ஊடாகவும் தபால் அலுவலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் சேவைகள் இடைநிறுத்தப்பட்டமையினால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

வவுனியாவில் ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தால் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இன்று (28.04) முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா காமினி மகாவித்தியாலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியானது அங்கிருந்து மன்னார் வீதி வழியாக கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து ஹொரவப்பொத்தானை வீதி ஊடாக பசார் வீதிக்கு சென்று அங்கிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி ஊடாக சென்று கண்டி வீதியில் முடிவடைந்தது.

மக்கள் கோஷங்களையும் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஆசிரிய சங்கத்தினர், அகில இலங்கை தபால் தந்தி தொடர்புகள் சேவையாளர் சங்கம், வெகுஜன அமைப்புக்கள், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், மின்சார சபை ஊழியர் சங்கம், நீர்பாசன திணைக்கள ஊழியர் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் கலந்து கொண்டன.

இதனால் மாணவர்களும் பாடசாலைக்கு செல்லவில்லை. இதன் காரணமாக பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்படுவதை அவதானிக்கமுடிந்தது. இருப்பினும் சில பாடசாலைகளில் இம்முறை கல்விப் பொது சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சென்றனர். ஒரு சில ஆசிரியர்கள் சமூகமளித்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## அமெரிக்கத் தூதுவர் யாழ். பல்கலை, நூலகத்திற்கு விஜயம்





**யாழ்.விசேட நிருபர்**

யாழ்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது, யூ. எஸ் எயிட் அனுசரணையுடன், யாழ். பல்கலைக் கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்படும் சமாதானமும், முரண்பாடுகளுக்கான தீர்வுகளும் என்ற முதுமாணிக் கற்கை நெறிக்கான அனுசரணையாளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரும், யூ. எஸ் எயிட் நிறுவன அதிகாரிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.



இதன்போது, பல்கலைக் கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், யூ. எஸ் எயிட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நேற்றைய தினம் புதன்கிழமை விஜயம் மேற்கொண்டார்.

பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட தூதுவரை யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் துரைராஜா ஈசன் வரவேற்றார். இதன்போது மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொண்டார்.

## நெடுந்தீவு கடலில் பலியான அமரலமேயன் குடும்பத்தினருக்கு ஒரு மில்லியன் இழப்பீடு

**பருத்தித்துறை விசேட நிருபர்**

கடற்தொழில் நடவடிக்கையின் போது இயற்கை அனர்த்தத்தில் சிக்கி நெடுந்தீவு கடற்பரப்பில் பலியான கடற்றொழிலாளர் ஒருவரது குடும்பத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒரு மில்லியன் ரூபா நிதி இழப்பீடாக நேற்றையதினம் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த வருடம் தொழிலுக்காக கடலுக்கு சென்றிருந்தபோது இயற்கை அனர்த்தத்தில் சிக்கி பலியான மரிய வேதநாயகம் அமரலமேயன் என்பவரது குடும்பத்தினருக்கே இந்த இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.



நேற்று காலை யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் மாவட்ட கடற்றொழில் பணிப்பாளர் சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இழப்பீடு வழங்கும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் இழப்பீட்டுக்கான காசோலையை அனர்த்தத்தில் பலியான அமரலமேயனின் தந்தையாரிடம் வழங்கியிருந்தார்.

இதன்போது கட்சியின் நெடுந்தீவு பிரதேச நிர்வாக பொறுப்பாளர் முரளி, நெடுந்தீவு பிரதேச கடற்றொழில் திணைக்கள் உத்தியோகத்தர் மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## பாடசாலை மரக்கறி செய்கை திட்டம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையில் மரக்கறி செய்கை திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் கலந்து கொண்டு முதற்கட்டமாக நூறு மரக்கறிப் பக்கற்றுக்களை வழங்கி வைத்திருந்தனர். மரக்கறி பயிர் வகைகள் பாடசாலையில் வைத்து மாணவர்களால் பராமரிக்கப்பட்டு பயன்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் தட்டுப்பாடு நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்கள்



**ஓமந்தை விஷேட நிருபர்**

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் நேற்றும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

அந்தவகையில், வவுனியாவிலுள்ள எரிபொருள் நிலையங்களை சூழ அதிகளவு தூரம் வரை மண்ணெண்ணையை பெற்றுக்கொள்ள மக்கள் வரிசை நீடித்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் கட்டுப்பாடுகளை விதித்து வழங்கி வருவதாகவும், ஒரு நபருக்கு 500 ரூபாவுக்கு என்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதாக எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## குருநகரைச் சேர்ந்த இருவர் தமிழகத்தில் தஞ்சம்

### இருவருக்கெதிராகவும் போதைப்பொருள் வழக்கு தாக்கல்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் குருநகர் பகுதியிலிருந்து தமிழகம் சென்ற இரு இளைஞர்கள் மீதும் இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமையால், அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குருநகர் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் தமிழகம், தனுஷ்கோடியை அண்மித்த தொண்டி பகுதியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை தமிழக கடலோர பாதுகாப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இருவரும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அகதிகளாக தமிழகத்திற்கு தஞ்சம் கோரி வந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, குறித்த இருவருக்கும் எதிராக இலங்கை நீதிமன்றில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் இருவரையும் அகதிகளாக ஏற்காமல் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## விளையாட்டால் வந்த வினை

### பப்ஜி கேம் விளையாடிய 22 வயது இளைஞன் பலி

**யாழ்.விசேட நிருபர்**

வீடியோ கேம் விளையாட்டில் அதீத ஈடுபாடு உடைய 22 வயதுடைய இளைஞன் விரக்தியில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் இளவாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

தொலைபேசியில் வீடியோ கேம் விளையாடுவது இளைஞனின் அண்மைக்கால நடவடிக்கையாக இருந்துள்ளது.

அதில் மூழ்கிப் போன அவர் அன்றைய தினம் அவரது அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் விசாரணையில் தெரிவித்தனர். இளைஞனின் சடலத்தில் காதுகளில் ஹெட்செட் மற்றும் காற்சட்டை பையில் அவரது கையடக்கதொலைபேசி என்பன இருந்துள்ளது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் இறப்பு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

வீடியோ கேம்மின் அதீத ஈடுபாடே விரக்திக்கான காரணமென சொல்லப்படுகின்றது. இதேவேளை வீடியோ கேம் விளையாடிய பல இளைஞர்கள் இந்தியாவில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பப்ஜி கேம் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் மனநலனை பாதிக்கும் என பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து கூறிவருகின்றனர். இந்த நிலையில் தற்போது இந்தியாவில் மத்திய அரசு பப்ஜி விளையாட்டுக்கு தடை விதித்துள்ளது.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும்.**

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள் பல உள்ளன. அவற்றுள் மிகவும் பிரசித்தமானதும் முதன்மையானதுமாக மோனலிசா ஓவியம் கருதப்படுகின்றது. மற்ற ஓவியங்களில் இல்லாத சிறப்பு உண்மைத்தன்மை இவ்வோவியத்தில் காணப்படுகிறது. தூரிகையைப் பயன்படுத்தி அழகிய வர்ணங்களால் இவ்வோவியம் மிகவும் அற்புதமாகவும் நேர்த்தியாகவும் வரையப்பட்டுள்ளது.

1. உலகப் புகழ்பெற்ற ஓவியத்தில் முதன்மையானதாக கருதப்படுவது எது?

…………………………………………………………………………………………

2. மற்ற ஓவியத்தில் இல்லாத எந்தத் தன்மையால் இவ்வோவியம் சிறப்பாக கூறப்படுகிறது?

…………………………………………………………………………………………

3. இப்பந்தியிலுள்ள இறந்தகால வினைமுற்று ஒன்றினை எழுதுக.

…………………………………………………………………………………………

4. ஓவியங்கள், வர்ணங்கள் இவற்றுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

…………………………………………………………………………………………

5. உண்மை, அழகிய இவற்றுக்கு எதிர்க்கருத்து சொற்களை தருக.

…………………………………………………………………………………………

6. புகழ்பெற்ற இதன் எதிர்ப்பதம் யாது?

…………………………………………………………………………………………

**II.**

7. முகம் மலர்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து யாது?

…………………………………………………………………………………………

8. அகரவரிசைப்படி சொற்களுக்கு பொருள் கூறும் நூல் எது?

…………………………………………………………………………………………

9. பசிக்கு உணவு என்பது போல் தாகத்துக்கு

…………………………………………………………………………………………

10. கிளி பேசும் என்பது போல் பல்லி ………………………………………………

**III. பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

11. யானைக் கூட்டம் பயிர்களை ……………………………. (அழித்தது / அழித்தன)

12. (நான், நாங்கள்) ……………………… யாவரும் நாளை போவோம்.

13. பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

i. பொ……..துபோக்கு ii. அலுவ……..கம்
iii. தொ……..ற்சாலை iv. தோர…….ங்கள்

14. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

i. நீ இங்கே வா என ஆசிரியர் அழைத்தார்

…………………………………………………………………………………………

ii. சூரியன் சந்திரன் அக்கினி என்பன முச்சுடர்களாகும்

…………………………………………………………………………………………

**IV. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. What are they?

…………………………………………………………………………………………

ii. Where do you live?

…………………………………………………………………………………………


16. பின்வரும் சொற்களின் சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களால் எழுதுக.

i. வியாழக்கிழமை - ………………………………………………

ii. மிளகாய் - ………………………………………………

**V.**

17.



i. இவ்வுருவிலுள்ள செங்கோணங்களை விட குறைந்த கோணங்கள் எத்தனை?

…………………………………………………………

ii. இவ்வுருவின் சமச்சீர் அச்சினை வரைக.

…………………………………………………………


18. உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கையையும் செவ்வகங்களின் எண்ணிக்கையையும் காண்க.

i. முக்கோணிகளின் எண்ணிக்கை


……………………………………

ii. செவ்வகங்களின் எண்ணிக்கை

……………………………………




19.



உருவிலுள்ள கூம்பகத்தின் மேற்பகுதியிலிருந்து அதே வடிவம் உள்ள ஒரு சிறிய கூம்பகத்தை வெட்டி நீக்கும் போது எஞ்சியிருக்கும் பகுதியில் எத்தனை முகங்கள் இருக்கும்.


………………………………………………………

20. உருவிலுள்ள முக்கோணியை எப்பெயர் கொண்டு அழைக்கலாம்?



……………………………………………..

21.




i) வீட்டிலிருந்து மரத்தை நோக்கி பயணித்த கமலா எத்தனை தடவை வடக்கு நோக்கி திரும்பியிருப்பாள்

ii) எத்தனை தடவை கிழக்கு நோக்கி திரும்பியிருப்பாள்?

22. [5] [2] [0] [7] இந்த இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது?

…………………………………………………………………………………………

23. இந்த நேரத்தை கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.

[03 : 30]



24. 3, 9, 27, …… அடுத்து வரும் இலக்கம் யாது? ………………………………

25. ஒரு தேங்காயின் விலை ரூ. 80.00. 500g சீனியின் விலை ரூ. 120.00 எனில் 3 தேங்காய்களும் 1 kg சீனியும் வாங்க தேவையான பணம் எவ்வளவு?

…………………………………………………………………………………………

26. 200 இன் அரைவாசி**யின்** ¼ உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

…………………………………………………………………………………………

27. 51 தொடக்கம் 55 வரை எண்ணும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

…………………………………………………………………………………………

28.

```
  L L X
  L X X
  ? 9 8
```

? - ……………………………

29. 26 ÷ 2 = 6 [●] 7

[●] இக்குறியீடு குறிப்பது என்ன கணிதச் செய்கையை?

…………………………………………………………………………

**VI. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. முள்முருக்கு பூக்கும் மாதம்?
i. பங்குனி ii. சித்திரை iii. ஆனி

31. நரி, குரங்கு என்பன கடிப்பதன் மூலம் ஏற்படத்தக்க நோயானது
i. விசர்நாய்க்கடி ii. கொள்ளை நோய் iii. கழிச்சல்

32. இலங்கையின் தேசிய விளையாட்டாக கருதப்படுவது
i. எல்லே ii. கரப்பந்தாட்டம் iii. கிரிக்கெட்

33. இலையின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்
i. கற்றாளை ii. பூவரசு iii. சதைக்கரைச்சான்

34. நீரில் முழுமையாக கரையாத பொருள்
i. உப்பு ii. சீனி iii. மஞ்சள் தூள்

35. வீடுகளில் அலங்காரத்துக்காக வைக்கப்பட்டுள்ள பொருள்
i. அலுமாரி ii. பூச்சாடி iii. மின்விசிறி

36. பிராணிகளின் தாக்கத்திலிருந்து பயிர்களை பாதுகாக்கும் ஒரு முறையானது
i. வெருளி அமைத்தல் ii. வாய்க்கால் கட்டுதல் iii. மூடுபயிர் வளர்த்தல்

37. புகையூட்டல் மூலம் நீண்டகாலம் சேமிக்கும் உணவுப் பொருள்
i. கருவாடு ii. மாங்காய் iii. ஈரப்பலா

38.



படத்தில் காணப்படும் பிராணியானது
i. வண்ணத்துப்பூச்சி
ii. தும்பி
iii. தேனீ

(10ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

39. தாவர உணவுகளை மட்டும் உட்கொள்ளும் பிராணி
i. பாம்பு ii. காகம் iii. முயல்

40. சூழல்நேயப் பூச்சிக் கட்டுப்பாட்டு திரவமானது
i. யூரியா iii. அமோனியா iii. புகையிலை நீர்

41. உடலில் இரத்த உற்பத்தி சீராக இருக்க வேண்டுமானால் நாம் கட்டாயமாக சேர்த்துக் கொள்ள வேண்டிய ஊட்டச்சத்து
i. இரும்பு ii. கல்சியம் iii. அயடின்

42. ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியமான செயல்
i. தியானம் செய்தல் ii. தூங்குதல் iii. சாப்பிடுதல்

43. பின்வருவனவற்றுள் முட்கள் காணப்படாத தாவரம்
i. ரோசா ii. கொய்யா iii. எலுமிச்சை

44. தீயணைக்கப் பயன்படும் வாயுவானது
i. காபனீரொட்சைட்டு ii. ஒட்சிசன் iii. ஐதரசன்

45. நாதஸ்வரம் என்பது ஒரு
i. தோற்கருவி ii. துளைக்கருவி iii. நரம்புக்கருவி

### கடந்த வார (22.04.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 2 | 21 | 2 | 31 | 3 |
| 02 | 2 | 12 | 2 | 22 | 3 | 32 | 2 |
| 03 | 2 | 13 | 1 | 23 | 3 | 33 | 2 |
| 04 | 1 | 14 | 1 | 24 | 2 | 34 | 3 |
| 05 | 1 | 15 | 2 | 25 | 1 | 35 | 1 |
| 06 | 1 | 16 | 3 | 26 | 3 | 36 | 2 |
| 07 | 3 | 17 | 1 | 27 | 1 | 37 | 3 |
| 08 | 2 | 18 | 2 | 28 | 2 | 38 | 2 |
| 09 | 3 | 19 | 1 | 29 | 1 | 39 | 2 |
| 10 | 1 | 20 | 1 | 30 | 3 | 40 | 1 |

46. ஈமெயில் என்பதன் தமிழ் வடிவம்
i. இணையம் ii. மின்னஞ்சல் iii. கணினி

47. இலங்கையின் பண்டைய வரலாற்றை அறிய உதவும் நூல் எது?
i. மகாபாரதம் ii. மகாவம்சம் iii. பைபிள்

48. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கக்கூடாத பொருள் எது?
i. இஞ்சி ii. கறுவாப்பட்டை iii. பூண்டு

49. மண்ணினுள் புதைக்கும் போது உக்கலடையாது இருக்கும் பொருள்
i. பொலித்தீன் ii. மரப்பட்டை iii. இலைகள்

50. நிலத்தை தோண்டி முட்டையிடும் பறவை எது?
i. வாத்து ii. தீக்கோழி iii. பருந்து

51. நத்தைகளை பிடித்து உண்ணும் பறவையானது
i. காகம் ii. குயில் iii. செண்பகம்

52. இலங்கைக்கு மிக அண்மையில் காணப்படும் நாடானது
i. இந்தியா ii. பாகிஸ்தான் iii. நேபாளம்

53. வித்து முளைப்பதற்கு தேவையற்ற காரணியானது
i. வெப்பம் ii. மண் iii. நீர்

54. பொசன் பண்டிகையை கொண்டாடும் மதத்தவர்
i. இந்துக்கள் ii. கிறிஸ்தவர்கள் iii. பௌத்தர்

55. பயிர்களின் இலைகளை சேதப்படுத்தும் பிராணியானது
i. எறும்பு ii. வெட்டுக்கிளி iii. கரையான்

56. ஊசித்துளை கெமராவின் மூலம் பார்க்கும் போது தோன்றும் உருவானது
i. நேரானது ii. சாய்வானது iii. தலைகீழானது

57. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் நான்காவது படி
i. பிரார்த்தனை ii. மலர்வு iii. திடசித்தம்

58. வாகனப் புகையினால் உடலில் அதிகம் பாதிக்கப்படும் உறுப்பு
i. இதயம் ii. சிறுநீரகம் iii. நுரையீரல்

59. வாகனம் ஓட்டும் ஒருவரிடம் அவசியம் இருக்க வேண்டியது
i. அடையாள அட்டை
ii. சாரதி அனுமதிப் பத்திரம்
iii. நன்நடத்தைச் சான்றிதழ்

60. ‘என் அன்புத் தோழனின் நற்குணங்கள்’ என்ற தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 5 சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

# இலங்கை - ஜப்பான் இராஜதந்திர உறவுகளின் 70 வருட கால பூர்த்தி

## ஜப்பான், இலங்கை இடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருட பூர்த்தியை முன்னிட்டு (2022 ஏப்ரல் 28 ஆம் திகதி) தூதுவர் மிசுகொஷி ஹிதேகி விடுத்துள்ள செய்தி

ஜப்பான் மற்றும் இலங்கை நாடுகள் 1952 ஏப்ரல் 28 ஆம் திகதி முறையான இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்துள்ளன. இருநாட்டு இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 70 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. அதற்காக இந்த அழகிய தீவைச் சேர்ந்த எமது நண்பர்களுக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சான் பிரான்சிஸ்கோ சமாதான அமர்வு இடம்பெற்றதன் விளைவாக ஜப்பான் மற்றும் இலங்கை இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகியிருந்தன. இந்த அமர்வினூடாக உலக நாடுகள் மத்தியில் ஒருமைப்பாடு, நேர்மை மற்றும் பெருந்தகைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஜப்பானை மீள நிறுவியிருந்ததுடன், யுத்தத்துக்கு பின்னரான மீளக் கட்டியெழுப்பும் துரித செயற்பாடுகளில் ஜப்பானை நிலைநிறுத்தியது.



அதே ஆண்டில் IBRD அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டமை மாபெரும் திருப்புமுனையாக அமைந்திருந்ததுடன், உலக வங்கியிடமிருந்து பல மில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், பிரதான தொழிற் துறைகளை கட்டியெழுப்புவதற்கும் இந்த பாரிய கடன் தொகை பயன்படுத்தப்பட்டதுடன், அடுத்த இரு தசாப்த காலங்களில் ஜப்பானின் வருடாந்த GNP ஐ 10 மடங்குக்கும் அதிகமான சதவீத வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்திருந்தது.

உலக பொருளாதார வரலாற்றில் இந்த ஒப்பற்ற வளர்ச்சியை அவதானித்த பொருளாதார வல்லுநர்கள், யுத்தத்துக்கு பின்னரான 'பொருளாதார அதிசயம்' என இதனை அழைத்தனர். 1953 ஆம் ஆண்டில் அதிகளவு கடன் பெறுநர் என வகைப்படுத்தப்பட்டிருந்த ஜப்பான், 1984 ஆம் ஆண்டில் உலக வங்கியின் இரண்டாவது மாபெரும் பங்குதாரராக திகழ்ந்ததுடன், முழுக் கடனையும் மீளச் செலுத்தியிருந்தது. 1990 ஆம் ஆண்டில் 31 செயற்திட்டங்களில் இந்தப் பெறுமதி 863 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்தது.

சாம்பல்களிலிருந்து மீண்டெழுவது என்பதன் பிரகாரம் ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி (ODA) என்பது அதற்கான அங்கமாக அமைந்துள்ளது. இலங்கைக்கும் இதனூடாக உதவிகள் வழங்கப்படுவதுடன், போக்குவரத்து, வலு, நீர் விநியோகம், கழிவுநீர் முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசனம் போன்றன மூலமாக சமூகபொருளாதார உட்கட்டமைப்பு என்பதை மையமாகக் கொண்டமைந்துள்ளது. இவற்றினூடாக உயர் பொருளாதார வளர்ச்சியை எய்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகவும் பிந்திய சாதனைகளில் கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ திட்டம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டம் கட்டம் 2 பக்கேஜ் B மற்றும் புதிய களனி பாலம் நிர்மாணம் போன்ற அனைத்தும் அபிவிருத்திக்கான ஒன்றிணைவு பிரிவில் எமது செயல்நிலையிலுள்ள பங்காண்மையை காண்பிப்பதாக அமைந்துள்ளது. ஜப்பானின் உதவிகளினூடாக அதிகளவு சாதனமான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பல ஜப்பானிய நிறுவனங்கள் இலங்கையில் தமது பிரசன்னத்தை ஏற்படுத்துவதுடன், பல்வேறு பிரிவுகளில் வியாபார வாய்ப்புகளை ஆராய்ந்த வண்ணமுள்ளன. கொழும்பு டொக்யார்ட் பிஎல்சி, நொரிடாகே லங்கா போர்சலேன் மற்றும் YKK லங்கா பிரைவட் லிமிடெட் போன்றன உற்பத்தித் துறையைச் சேர்ந்த சில முன்னணி நிறுவனங்களாக காணப்படுவதுடன்,



திறன் விருத்தியை ஏற்படுத்துவது மாத்திரமன்றி, உள்நாட்டு உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனூடாக அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுப்பதிலும் பங்களிப்பு வழங்குகின்றன.

இந்தப் புதுப்பிக்கப்பட்ட ஈடுபாட்டுடன், மனித வளங்கள் அபிவிருத்தி, நிதி வலுவூட்டல் ஆகியவற்றுடன் “Kaizen” மற்றும் '5S' இல் குறிக்கப்பட்டுள்ள தர முகாமைத்துவம் போன்றவற்றினூடாக, இலங்கை மற்றும் ஜப்பான் இடையிலான அபிவிருத்திக்கான ஒன்றிணைவு என்பது எதிர்வரும் பல ஆண்டுகளிலும் வளர்ச்சியைப் பதிவு செய்யும் என்பதுடன், பெருமளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

பரஸ்பர உறவுகளை கட்டியெழுப்புவதில் உறுதியான பொருளாதார உறவுகள் முக்கிய பங்கை ஆற்றுவதுடன், ஜனநாயகம் மற்றும் நிரந்தர சமாதானம் ஆகியவற்றை வலியுறுத்தும் எமது பொதுவான நம்பிக்கையான பௌத்த மதம், எம்மை வழிநடத்தும் கொள்கைகளாக அமைந்துள்ளது.

2004 ஆம் ஆண்டில் இந்திய பெருங்கடல் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி அனர்த்தம், 2011 ஆம் ஆண்டில், ஜப்பானின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி அனர்த்தம் மற்றும் மிக அண்மையில் உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த கொவிட்19 தாக்கம் போன்ற சில அனர்த்தங்களை நாம் பொதுவாக எதிர்கொண்ட அனர்த்தங்களாக குறிப்பிட முடியும். 2002 ஆம் ஆண்டில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் சமாதான பணிகளை முன்னெடுப்பதில் ஜப்பானின் அகாஷி யசுஷி அவர்களின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் உறுதி செய்வதாக அமைந்திருந்தன. 2019 ஆம் ஆண்டில் அகாஷிக்கு ஸ்ரீ லங்கா ரத்னா கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

# மின்நிலையங்கள் மூடப்பட்டதால் பாகிஸ்தானில் பல இடங்கள் இருளில்

இலங்கைக்கு நிகராகப் பாகிஸ்தானும் பொருளாதார நெருக்கடியில் உள்ளது. ஒருபக்கம் மக்கள் ஆட்சி மாற்றம் நடந்தவுடன் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடும் என எதிர்பார்த்து இருந்த வேளையில், அந்நாட்டின் பிரதமராகப் பதவியேற்றியுள்ள ஷெபாஸ் ஷெரீப் பிரச்சினையைச் சமாளிக்க முடியாமல் தவித்து வருகிறார். ஷெபாஸ் ஷெரீப் எடுத்த முக்கிய முடிவால் அந்நாட்டின் எண்ணெய் நிறுவனங்களுக்குச் சுமார் 30 பில்லியன் டொலர் சுமை உருவாகியிருக்கும் நிலையில், தற்போது மக்கள் இருட்டில் வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பாகிஸ்தான் ஏற்கனவே அதிகப்படியான நிதி நெருக்கடியில் இருக்கும் நிலையில், உக்ரைன் போர் மூலம் விநியோகச் சங்கிலி, உற்பத்தி ஆகியவற்றில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக எரிபொருள், எரிவாயு விலை கடுமையாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் மின்சார உற்பத்தி தளத்தை இயக்கத் தேவையான நிலக்கரி மற்றும் இயற்கை எரிவாயுவை வெளிநாட்டில் இருந்து வாங்குவதற்குக் கூடப் பணம் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது பாகிஸ்தான். இதனால் கடந்த 6 மாதத்தில் அடுத்தடுத்து பல மின்சார உற்பத்தி தளங்கள் மூடப்பட்டுள்ளன.

சுமார் 3535 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் தளம் எரிபொருள் இல்லாத காரணத்தால் மூடப்பட்டுள்ளது. இதேபோல் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 3605 மெகாவாட் மின்சார உற்பத்தி தளம் முடக்கப்பட்டு உள்ளது. ஏப்ரல் 13 ஆம் திகதி வரை பாகிஸ்தான் நாட்டின் 7140 மெகாவாட் மின்சார உற்பத்தி தளம் மூடப்பட்டு உள்ளது. 6000 மெகாவாட் மின்சாரம் தட்டப்பாடு பாகிஸ்தான் நாட்டிற்குச் சுமார் 21500 மெகாவாட் மின்சாரம் தேவையாக இருக்கும் நிலையில், 15500 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் சுமார் 6000 மெகாவாட் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்பட்டு அந்நாட்டின் பல பகுதிகளில் மக்கள் இருட்டில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# கிழக்கின் குரல்



# சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் இடங்களில் அந்நிய செலாவணி மையங்களை அமைக்கவும்

## அரச வங்கிகளின் மாகாண பிரதிநிதிகளுக்கு கிழக்கு ஆளுநர் உத்தரவு

தம்பலகாமம் குறூப் நிருபர்

சுற்றுலாத்துறையின் ஊடாக நாட்டுக்கு அந்நிய செலாவணியை அரச வங்கிகள் ஊடாக ஈர்ப்பதற்கான துரித ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை ஆரம்பிக்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அரச வங்கிகளின் மாகாண பிரதிநிதிகளுக்கு உத்தரவிட்டார். திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (26) இடம் பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மாகாணத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் இடங்களில் அந்நிய செலாவணி மையங்களை அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். இதன் மூலம் வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களில் சட்டவிரோதமான பரிவர்த்தனைகள் குறையும் என்றும் கூறினார். மேலும், வெளிநாட்டு நாணயங்களை அரச வங்கிகள் ஊடாக மாற்றுவதற்கான பொது அறிவிப்பு பலகைகளை அமைக்குமாறும் ஆளுநர் இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார்.



நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில், அரச வங்கிகள் ஊடாக மக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு வழிகளை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இந் நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க மற்றும் திருகோணமலையில் உள்ள அரச வங்கிகளின் மாகாண அலுவலகங்களின் முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

## பொருளாதாரத்தை சீர் செய்யுமாறு அடையாள வேலை நிறுத்தம்



(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்யுமாறும், பல்கலைக்கழக ஊழியர்களின் நீண்டகால சம்பள முரண்பாடுகளை சீர்செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுவதை கண்டித்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் வியாழக்கிழமை (28) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அதிகரித்துள்ள விலைவாசியை குறை, உயர் கல்வியை சீர் செய், எரிபொருளுக்கான விலையை குறை, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கு, ஜனநாயகத்தை நிலைநாட்டு, மக்களின் உரிமையை பாதுகாப்போம் போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் பல்கலைக்கழக ஒலுவில் வளாக பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் ஆரம்பமாகி கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதி வரை சென்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனத்தின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம். எம். நௌபர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கூடுதலான விவசாயிகள் காணப்படுவதால் விவசாய செய்கையில் ஈடுபடுவதற்குரிய எரிபொருளை வழங்கி குறித்த காலப்பகுதிக்குள் விதைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு ஆவண செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## சந்தையில் கலப்பட உரம்; விவசாயிகள் அவதானம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

நெற்செய்கையின் போது பிரயோகிக்கப்படும் யூரியா உரத்தில் கலப்படம், நிறை மோசடி இடம்பெற்று வருவதாகவும், இவ்விடயங்களில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச விவசாயிகள் அவதானமாகத் தொழிற்பட வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

யூரியா உரத்திற்கு தேசிய ரீதியிலிருந்த தடை அரசினால் நீக்கப்பட்டதையடுத்து, தற்போது சந்தையில் அதிகரித்த விலையில் யூரியா உரம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில், குறித்த சில பிரதேசங்களில் கலப்பட உரம் சந்தையில் உலாவுவதாகவும், நிறைக் குறைவு இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, நெல் உற்பத்திக்கு பிரயோகிக்கப்படும் உரவகைகள், களைநாசினி, கிருமிநாசினி உள்ளிட்ட இரசாயனங்கள் அம்பாறை மாவட்டத்தில் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். விவசாய இரசாயனங்களை பட்டியல் விலையை விடவும், அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதனால், நெல் உற்பத்திச் செலவு கணிசமானளவு அதிகரித்துள்ளதாக விவசாயிகள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

## திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இப்தார் நிகழ்வு

கிண்ணியா மத்திய நிருபர்

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு புதன்கிழமை (27) மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் முக்கிய நிகழ்வுகள் அனைத்து உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்று வருகின்றது. சமயங்களிடையே புரிந்துணர்வுகளை ஏற்படுத்த இவ்வாறான நிகழ்வுகள் வலுசேர்க்கும்.

ரமழான் மாத நோன்பு ஒரு நபர் தன்னைத்தானே சுயவிசாரணை செய்துகொள்ள ஏதுவாக அமையும். மதங்கள் அனைத்தும் நல்ல விடயங்களையே போதிக்கின்றன. சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்ப மதங்களின் போதனைகள் ஏதுவாக அமைவதாக இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

ரமழான் சிந்தனை இதன்போது அல்ஹாபிழ் இன்சாப் மௌலவியால் நிகழ்த்தப்பட்டது. கடந்த இரண்டு வருடகாலமாக கொவிட் நிலவரம் காரணமாக மாவட்ட செயலகத்தில் வருடா வருடம் நடைபெறும் இப்தார் நிகழ்வுகள் உட்பட ஏனைய சமயங்களின் நிகழ்வுகள் நடாத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## இன்று ஆன்மிக கலாசார நடைபவனியும் பாற்குட பவனியும்

(காரைதீவு குறூப் நிருபர்)

வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை அடுத்து இன்று (29) வெள்ளிக்கிழமை ஆன்மிக கலாசார பவனியும் பால்குட பவனியும் இடம்பெற இருக்கின்றது.

இன்று காலை கல்முனை காரைதீவு அட்டப்பள்ளம் மற்றும் திருக்கோவில், அக்கரைப்பற்று பகுதிகளிலிருந்து புறப்பட இருக்கின்ற ஆன்மிக கலாசார நடைபவனி எட்டு மணி அளவில் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தை வந்தடைய இருக்கின்றன.

ஆலயத்தின் மேற்கு கும்பாபிஷேக மன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க பீடத்தில் பவனிக்கான பால் வழங்கப்பட்டு அங்கிருந்து வயல்வெளி ஊடாக பால்குட பவனி இடம்பெறும் .

பால்குட பவனியில் பங்கேற்பவர்கள் குடத்துடன் வருகை தர வேண்டும். அவர்களுக்கான பால் சிவலிங்க பீடத்தில் வைத்து வழங்கப்படும். அங்கிருந்து ஊர்வலமானது நேராக ஆலயத்தை வந்தடையும்.

ஆலயத்தில் 10 மணிக்கு அம்மனுக்கு பால் சொரிதலுடன் விசேட பூஜையும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் முன்னிலையில் இடம்பெறும் .

## கலை மன்றங்களுக்கு காசோலை வழங்கி வைப்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான வருடாந்த கொடுப்பனவை வழங்கி வைக்கும் நீகழ்வு, புதன்கிழமை (27) பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந் நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் கலை மன்றங்களுக்கான கொடுப்பனவை வழங்கி வைத்தார்.

இங்கு உரையாற்றிய உதவி பிரதேச செயலாளர், கலை மன்றங்கள் பிரதேச மட்டத்தில் காணப்படுகின்ற கலைஞர்களை அடையாளம் கண்டு, அவர்களை கிராம மட்டத்தில் இருந்து தேசிய மட்டத்திற்கு முன்கொண்டு செல்லும் பணியை முன்னெடுக்கவேண்டும்.

போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்கு தேவையான ஒத்துழைப்புகளை கலை மன்றங்கள் வழங்க வேண்டும். எதிர்காலத்தில் கலை மன்றங்களை ஒன்றிணைத்து பிரதேசத்திலுள்ள பாடசாலை மற்றும் ஏனைய நிறுவனங்களில் கலைத் துறைகளில் ஈடுபட்டு வருகின்ற கலைஞர்களை அடையாளங்கண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான வேலை திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு கலை மன்றங்கள் தமது ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## மக்களின் நல்வாழ்வுக்கு விஷேட பூஜை வழிபாடு



(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

நாட்டு மக்களின் சுபிட்சமான நல்வாழ்வுக்கான விஷேட பூஜை வழிபாட்டு நிகழ்வுகள், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த விஷேட பூஜை வழிபாட்டு நிகழ்வுகள் புதன்கிழமை (27) நள்ளிரவு ஆரம்பமாகி காலை 9.30 மணியளவில் அன்னதானத்துடன் நிறைவுபெற்றது. இதற்கு கிழக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் மாகாண திணைக்களங்கள் தங்களின் பங்களிப்புக்களை வழங்கியிருந்தன.

குறிப்பாக, நாட்டு மக்கள் நஞ்சற்ற உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் பாரிய பங்களிப்புக்களை செய்து வருகின்றது. அதற்கமைவாக அன்றையதினம் விஷேடமாக தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சியை அதிகாலை நேரம் வழங்கி வைத்ததும் குறிப்பிடத்தக்கது.

## விதவைகளுக்கு வை.எம்.எம்.ஏ ஊடாக உலர் உணவு பொதிகள்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

புனித நமழான் மாத்தினை முன்னிட்டு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விதவைகளுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையில் பதிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, அக்கரைப்பற்று, இறக்காமம், கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர், மத்தியமுகாம், மாளிகைக்காடு, பொத்துவில், ஹூசைனியா நகர் ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விதவைகளுக்கு தலா 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் அந்தந்த வை.எம்.எம்.ஏ.களின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் சஹீத் எம்.ரிஸ்மி, முன்னாள் தேசியத் தலைவர் கே.என்.டின் ஆகியோர்களது முயற்சியின் பயனாக அல்மா ஐ செற்றி மற்றும் தனவந்தர்கள் மூலம் கிடைக்கப் பெற்ற நன்கொடையிலிருந்து இத்திட்டம் நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அம்பாறை மாவட்டத்தில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 0.72 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் சஹீத் எம். ரிஸ்மி, முன்னாள் தேசியத் தலைவர் கே.என்.டின் மற்றும் பேரவையின் பதவி வழி உத்தியோகத்தர்களுக்கு இதன் போது பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் முகம்மட் றியாஸ் நன்றி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வுகளில் அகில இலங்கை வை.எம். எம்.ஏ.பேரவையின் உப தலைவர் எஸ்.தஸ்தக்கீர், பேரவையின் செயற்றிட்டப் பணிப்பாளர் கே.எல். சுபையிர், பேரவையின் மாவட்டப் பணிப்பாளர் முகம்மட் றியாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





சம்மாந்துறை தாறுல் ஹஸனாத் குர்ஆன் மனன கலாசாலையில் இப்தார் நிகழ்வு இடம் பெற்றது. ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் கலாசாலையின் அதிபர் ஏ.ஆர்.எம்.முனவ்வர் தலைமையில் நடைபெற்ற போது.

படம்; பாலமுனை தினகரன் நிருபர்



மட்/ ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியில் புகுநிலை தேர்ச்சிக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது. இக்கண்காட்சியில் சிறப்பு விருந்தினராக அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி S.புண்ணியமூர்த்தியும் வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கலந்து சிறப்பித்தனர்.



சென்னையில் உள்ள வங்காளதேசத்தின் துணை உயர் ஆணையர் ஷெல்லி சலேஹினின் அழைப்பின் பேரில், சென்னையிலுள்ள இலங்கைக்கான துணைத் தூதுவர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன் நேற்று பங்களாதேஷின் சுதந்திரம் மற்றும் தேசிய தினத்தில் பங்கேற்ற போது...

# DFCC வங்கியின் 25ஆவது ATM/CRM பனாகொடையில் திறப்பு





DFCC வங்கி, தனது 25 ஆவது வெளியக ATM/CRM ஐ பனாகொட, டெம்பிள்பேர்க் தொழிற்பேட்டை வளாகத்தில் அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிமுக நிகழ்வில் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இந்த வலயத்தில் 34 நிறுவனங்கள் மற்றும் 5000 க்கும் அதிகமான ஊழியர்கள் காணப்படும் நிலையில், இந்த அமைவிடத்திலிருந்து 3 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கும் அனுபவிக்கக்கூடிய வகையில் இந்த ATM/CRM சேவை அமைந்துள்ளது. நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன், சௌகரியமான முறையில் தமது டிஜிட்டல் நிதிச் சேவைகளை பொது மக்களுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.


## பொது வைத்தியசாலை - ஸ்ரீ ஜயவர்தனபுர
## விலைமனுக்களுக்கான அழைப்பு

கேள்வி இல. Q – 207/22

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையிலுள்ள சலவையக உபகரணங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தலுக்கான கேள்வி

பின்வருமாறு விபரிக்கப்படும் ''ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையிலுள்ள சலவையக உபகரணங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தலுக்கான கேள்வி'' என்பவற்றுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

01. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்காக தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் இதனையொத்த வேலையை கடந்த 05 வருடத்தினுள் மேற்கொண்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
02. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-05-18ஆம் திகதி முதல் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவைச் (2,500.00 ரூபா) செலுத்தி மற்றும் நுகேகொட, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அதிகாரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி இல. 0112778610 – நீடிப்பு 3142 / 0112778624** மற்றும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வைத்தியசாலையின் வழங்கல் திணைக்களத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. விலைமனுக்களை 2022-05-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொட** எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைவரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் இதில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
05. பராமரிப்பு பொறியியலாளர் / மின்சார மேலாளருடன் 2022-05-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வேலைத் தளத்தைப் பரிசீலனை இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை - ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**





## கேள்வி அறிவித்தல்

### 2022/2023ஆம் ஆண்டிற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் நீராவி பொயிலர் மற்றும் நீராவி விநியோக அமைப்பின் வருடாந்த பராமரிப்பு மற்றும் நற்சான்றளித்தலுக்கான கேள்வி அழைப்பு

Q 209/22

01. கடந்த மூன்று (3) ஆண்டுகளாக இத்துறையில் சிறந்த அனுபவமுள்ள நம்பகமான நிறுவனங்களிலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் 2022/2023ஆம் ஆண்டிற்கு நீராவி பொயிலர் மற்றும் நீராவி விநியோக அமைப்பிற்கான வருடாந்த பராமரிப்பு மற்றும் சான்றளித்தலுக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்க விரும்புகின்றார்.

02. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு முறைமையின் ஊடாக நடத்தப்படும்.

03. எந்த வேலை நாட்களிலும் மு.ப. 9.00 இற்கு பி.ப. 3.00 இற்கும் இடையில் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு ரூ. 2500/-ஐ செலுத்துவதன் பேரில் (ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை) கணக்காளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ காசுப் பற்றுச்சீட்டு மற்றும் ஓர் வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பிப்பதன் பேரில் (ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை) வழங்கல்கள் அலுவலரிடமிருந்து கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. நுகேகொட, தலபத்பிட்டிய ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் நகல்களுடனான முழுமையான கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது 2022.05.19ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தலைவரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். அத்துடன் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.

**தலைவர் பெறுகைக்குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**




# பஹலகம கால்வாய் 3 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு



ஹாலிஎல வசேட நிருபர்

*பண்டாரவளை மகுல்எல்ல பஹலகம குளத்திலிருந்து மகுலெல்ல மற்றும் அதனைச் சூழவுள்ள விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் கால்வாய் 3 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.*

*நீண்டகாலமாக பாழடைந்த மகுலெல்ல கால்வாயில் இருந்து முறையாக நீர் கிடைக்காததால் 67 ஏக்கர் பரப்பளவுள்ள மகுலெல்ல நெல் வயலில் பல விவசாயிகள் முறையாக விவசாயம் செய்ய முடியாமல் குளத்தில் உள்ள பெரும்பாலான தண்ணீர் வீணாகி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.*

*இப்பிரதேச விவசாயிகள் இது தொடர்பில் பண்டாரவளை பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து பண்டாரவளை பிரதேச சபையின் தலையீட்டில் 325 மீற்றர் நீளமுள்ள இந்த கால்வாயை காணி மீட்பு மற்றும் புனரமைப்பு கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியுடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*


## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/09/018 | இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு மனித வளங்கள் தகவல் முறைமைக்கான வடிவமைப்பு வழங்கல், அமுல்நடாத்தல், இடம்பெயர்தல் ஒருங்கிணைப்பு மற்றும் பராமரிப்பு. | 200,000.00 | 3,500.00 | 2022.05.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குனராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**



## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **CMS/LP/21/ PT/08/055** | **Spares for Hino Boom Truck** | **18,000.00** | **1,000.00** | 2022.05.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| **CMS/LP/22/ PT/03/051** | **Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT – 06 Nos.** | **50,000.00** | **1,000.00** | 2022.05.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## உள்ளூராட்சி திணைக்களம், வடமத்திய மாகாணம்
## உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் (LDSP)

**PROJECT ID P.163305**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து கடனொன்றை உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டத்திற்காக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை பின்வரும் ஒப்பந்தங்களுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உரித்தான உள்ளூர் அதிகாரம் பெற்றவர்களிடமிருந்து மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள **CIDA** பதிவு செய்தலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சி திணைக்களம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்/ ஆணையாளரிடமிருந்தும் (தொலைபேசி இல.: 025-2234728. தொலைநகல்: 025-2234728. மின்னஞ்சல்: ncplg2020@gmail.com) கீழேயுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்ட உரித்தான உள்ளூர் அதிகாரம் பெற்றவர்களின் தலைவரிடமிருந்தும் பெற்று வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் உரித்தான உள்ளூர் அதிகாரம் பெற்றவர்களின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
7. 2022.04.28 ஆம் திகதியிலிருந்து 2022.05.18 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சி திணைக்களம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்/ ஆணையாளருக்கு கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உரித்தான உள்ளூர் அதிகாரம் பெற்றவர்களின் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
8. 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சி திணைக்கள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்/ ஆணையாளரின் முகவரியில் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படல் வேண்டும். கீழேயுள்ள அட்டவணையில் உரித்தான செயற்றிட்டங்களுக்கான விலைமனுப்பிணை தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்,**
**உள்ளூராட்சி திணைக்களம்,**
**மாகாண சபை கட்டிடத் தொகுதி (தரை மாடி),**
**ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம்.**

| இல. | உள்ளூர் அதிகாரசபை | தொடர்பு விபரங்கள் | செயற்றிட்டப் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு மற்றும் நிர்மாண காலப்பகுதி | CIDA தரம் மற்றும் விஷேடத்துவம் | விலைமனுப் பிணைத் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் (வரையும்) | மீளளிக்கப் படாத கட்டணம் | விலைமனு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | நொச்சியாகம பி.ச. | முகவரி: பிரதேச சபை, நொச்சியாகம<br>தொ.இல. 025-2257875<br>தொலைநகல்: 025-2257875<br>மின்னஞ்சல்: **nochchiyagamapsn@gmail.com**<br>ஒப்பந்த இல.: LDSP/2021/AP/05 | கட்டுபத்வெவ GND இற்காக நீர் வழங்கல் திட்ட நிர்மாணம் | 27.93 மில். 210 நாட்கள் | கட்டிட நிர்மாணத்திற்காக சி-5 அல்லது மேற்பட்டது | 300,000.00 2022.10.13 | 5,000.00 | 119 நாட்கள். 2022.09.15 ஆம் திகதியன்று வரையும். |
| 02. | பலாகல பி.ச. | முகவரி: பிரதேச சபை, பலாகல.<br>தொலைபேசி இல.: 025-5673808.<br>தொலைநகல்: 025-2051765.<br>மின்னஞ்சல்: **palagalapradeshiyasabha@gmail.com**<br>ஒப்பந்த இல.: LDSP/2021/AP/03 | கிராமிய வேலைவாய்ப்பு உற்பத்தி (01 ஆம் கட்டம்) இற்காக உள்ளூர் உற்பத்தி நிலையமொன்றின் நிர்மாணம் | 55.19 மில். 270 நாட்கள் | கட்டிட நிர்மாணத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது | 600,000.00 2022.10.13 | 15,000.00 | 119 நாட்கள். 2022.09.15 ஆம் திகதியன்று வரையும். |
| 03. | நுவரகம்பலாத்த மத்திய பி.ச. | முகவரி: பிரதேச சபை, நுவரகம்பலாத்த மத்தி. தொலைபேசி இலக்கம்: 025-3855372. தொலைநகல்: 025-2053056.<br>மின்னஞ்சல்: **manupasabhawa@gmail.com**<br>ஒப்பந்த இல.: LDSP/2021/AP/06 | முன்பள்ளி பராமரிப்பு நிலையம் மற்றும் மாநாட்டு மண்டப நிர்மாணம். | 26.20 மில். 210 நாட்கள் | கட்டிட நிர்மாணத்திற்காக சி-5 அல்லது மேற்பட்டது | 300,000.00 2022.10.13 | 5,000.00 | 119 நாட்கள். 2022.0915 ஆம் திகதியன்று வரையும். |
| 04. | இராஜாங்கனய பி.ச. | முகவரி: பிரதேச சபை, இராஜாங்கனய.<br>தொலைபேசி இலக்கம்: 025-2276376.<br>தொலைநகல்: 025-2275625<br>மின்னஞ்சல்: **rajanganayap.sabawa@yahoo.com**<br>ஒப்பந்த இல.: LDSP/2021/AP/01 | இராஜாங்கனய சந்தியில் கிராமிய சந்தையின் நிர்மாணம். | 22.83 மில். 210 நாட்கள் | கட்டிட நிர்மாணத்திற்காக சி-6 அல்லது மேற்பட்டது. | 300,000.00 2022.09.01 | 5,000.00 | 77 நாட்கள். 2022.08.04 ஆம் திகதியன்று வரையும். |

## மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவின் ஆண்டிற்கான கள்ளுத்தவறணைகள் விற்றல் – 2022/2023

2022 ஆம் அண்டு ஆடி மாதம் 1ஆம் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு மஹவெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கள்ளுத்தவறணை குத்தகை விற்பனைக்காக 2022.06.02 ஆம் திகதி மு.ப.10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மேலதிக விபரங்கள் 2022.04.29 ஆம் திகதி பிரசுரிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானி பத்திரிகையை பார்க்கவும்.

**எச்.எம்.என்.ஹேரத்**
**பிரதேச செயலாளர்**
**மஹவெவ**
**2022.04.19**

## மீண்டும் கள்ளு தவரணை குத்தகை விற்பனை – 2022– 2023

### வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு

2022.07.01ம் திகதி முதல் 2023.06.30 திகதி வரையுள்ள காலத்திற்கான குத்தகை விற்பனைக்கான கேள்வி பத்திரங்கள் 2022.05.31 திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 2022.04.29ம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**பிரதேச செயலகம்,**
**வென்னப்புவ.**

**யு.எஸ்.என். பிரனாந்து,**
**பிரதேச செயலாளர்**
**வென்னப்புவ**

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2021 ஒக்டோபர் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2022 மே 13ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புள்ளை | 2021 ஒக்டோபர் 31ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க
மாவத்தை, கொழும்பு 08

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **CES/FP/03/ PT/6280(EL)** | **05 Nos. Ventilation Blowers for the Hoist Motors of the Transfer Cranes** | 15,000.00 | 1,000.00 | 2022.05.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/05/ PT/6277(EL)** | **05 Nos. MB – 70 Base Boards for the PLC of JCT Cranes** | 15,000.00 | 1,000.00 | 2022.05.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/06/ PT/6212(MP)** | **Spare Parts for UD Nissan Prime Movers** | 35,000.00 | 1,000.00 | 2022.05.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/04/ PT/6291(MAR)** | **01 No. High Pressure Water Jet Blasting Machine** | 450,000.00 | 3,500.00 | 2022.05.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/02/ PT/6294(MP)** | **Wire Ropes for Tadano GR-120N-1-00103 Mobile Cranes** | 15,000.00 | 1,000.00 | 2022.05.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/04/ PT/6301(MP)** | **01 No. Main Hoist Wire Rope for Kobelco 45 Ton Crane** | 15,000.00 | 1,000.00 | 2022.05.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/05/ PT/6302(MP)** | **Engine Spares for Terberg YT 220 Terminal Tractors at JCT** | 110,000.00 | 3,500.00 | 2022.05.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 2022ஆம் வருடத்தில் மின்சாரம் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களை பராமரித்தல், வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல், மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்தவேலைகளுக்காக வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களை நியமித்துக்கொள்வதற்காக 2022-05-18ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. மின்சாரம் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களை பராமரித்தல் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் - 2022/2023

| தொ. இல. | ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர் | குறிப்பீட்டிலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| I | மின்சாரம் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் - 2022 | DGHP/ACC/ F8/36-01/2022 | 3,000.00 | 25,000.00 |
| II | வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் - 2022 | DGHP/ACC/ F8/36-02/2022 | 3,000.00 | 25,000.00 |

01. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விலைமனு ஆவணக் கட்டணமாக இந்த வைத்தியசாலையின் கணக்காளருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விலைக்கோரல் தனி உருப்படியாக முன்வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் தனி உருப்படியாகவே விலைக்கோரல் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கும் போது பதிலீடுகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் கூடாது என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
03. விலைமனுக்களைக் கொள்வனவு செய்யும் உத்தேச உருப்படிக்கான விலைக்கோரல் பெறுமதி 05 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டால், விலைமனுதாரர் அல்லது அவர் சார்பான பிரதிநிதியொருவர், உப பிரதிநிதியொருவர் அல்லது முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் கொழும்பு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
05. ஆர்வம் கொண்ட மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்கள் / முகவர்கள் அல்லது பெயரிடப்படுபவர்களால் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளப்படும் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியில் மாத்திரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    - i. பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வரையப்பட்ட இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பிலான எழுத்து மூலக் கடிதம்
    - ii. மேற்காணும் வகையிலான மீளளிக்கப்படாத கட்டணத்தை பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
06. பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு இல. 362) எனும் தொலைபேசி இலக்கங்களின் வாயிலாக விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022-05-17ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கடமை நாட்களில் மட்டும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகை மற்றும் கிரய முகாமைத்துவ பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. பெறுகை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறித்த விடயத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2022-05-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து (அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு) பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.
08. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் கலந்து கொள்வாரானால் அதை உறுதி செய்யும் ஆவணத்தை நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. இந்தப் பெறுகை தொடர்பில் வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை.**
2022-04-27

சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)

## பெறுகை அறிவித்தலின் திருத்தம்

2022 ஏப்ரல் 04ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது.

நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள (தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 03/2022) சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு தீர்மானித்துள்ளது.

மேலதிக விபரங்களை கொழும்பு-03, இல. 80, காலி வீதி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து 0112426800 – நீடிப்பு 305, 277, 303 எனும் தொடர்பிலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல்: amilam@srilanka.travel/ sltdaproc@srilanka.travel எனும் மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை**
**இல. 80, காலி வீதி. கொழும்பு-03.**

## மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகளின் பிரசித்த ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் மகா சங்கத்தின் அடகு முகவர்களான வ/ப மாவனல்லை ஹெம்மாத்தகம பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், மாவனல்லை, ஹெம்மாத்தகம, அளுத்நுவர, மாகடவர, கெப்பெட்டிபொல, அல்பிட்டிய, உடமுல்ல, வேகன்தலே, அத்தனகொட, ரன்திவல மற்றும் தெஹிமடுவ ஆகிய கிராமிய வங்கிக்கிளைகளில் 2020.12.31வரை அடகுவைத்து 2022.05.20 வரை மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள், 2022.05.21 மற்றும் 2022.05.22 ஆகிய தினங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை மாவனல்லையிலுள்ள கூட்டுறவு மண்டப வளாகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப மாவனல்லை ஹெம்மாத்தகம,**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**மாவனல்லை,**
**தொலைபேசி இல: 035-2246128/ 035-2249416**

2022.04.26ஆம் திகதி

### விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

எழுத்துக்காரன் வீதி, கோட்டைக்கல்லாறு-2 மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணம் தம்பியப்பா வேலாயுதம் (தேசிய அடையாள அட்டை இல-481725275V) என்பவருக்கு கோட்டைக்கல்லாறு-1 களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு மாவட்டம் தற்காலம் 4 ஷெரிடன் கோர்ட், 736 விட்டன் அவென்யூ மேற்கு, நோர்டோல்ட் யூ வி 5 4 ஜெ யு லண்டன் இங்கிலாந்து என்னும் விலாசத்தை வசிப்பிடமாகக் கொண்ட கோணாமலை நவலீலா (தேசிய அடையாள அட்டை இல - 782800213V கடவூச்சீட்டு இலக்கம் :-N1616780) என்பவரால் பிரசித்த நொத்தாரிசு எம். கே. சிறிதரன் அவர்களால் 2022.02.19 ஆம் திகதி வால்டன் அவென்யூ தெற்கு, ஹாரோ மிடில் செக்ஸ் எச் ஏ 2 8 கியு வை இங்கிலாந்து எனும் இடத்தில் வைத்து அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 2022.03.08 ஆம் திகதி 254 ஆம் தொடர் இலக்கத்தில் 68 ஆம் புத்தகத்தில் 30 ஆம் பக்கத்தில் பதியப்பட்டதுமான விஷேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்கின்றேன் என்பதை இலங்கை அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இனி இவரால் செய்யப்படும் எந்தவோரு செயலுக்கும் நான் பொறுப்பானவர் அல்ல என்றும் அறிவிக்கின்றேன்.

**- கோணாமலை நவலீலா**

## அறிவித்தல்

பொல்கஹவெல பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையின் வரைவு தயாரித்தல்

2023ஆம் ஆண்டிற்கான, பொல்கஹஅவெல பிரதேச சபையின் வரவு செலவு அறிக்கையின் வரைவைத் தயாரிப்பதற்காக உத்தேச மூலதனச் செலவினம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களிற்கு உள்ளடக்கப்படுவதற்காக, எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர், “தலைவர், பிரதேச சபை, பொல்கஹவெல என்ற முகவரிக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**லிவேரா குணதிலக,**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**பொல்கஹவெல,**
**தொ.பே. இல: 037-2243274**

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொச்சிக்கடை தளுவகொட்டுவ தக்கியாவீதி இல. 484/1இல் வசிக்கும் **விக்ரம ஆரச்சிகே ஹெலன் சுசீலா பியட்ரிஸ் பெர்னாண்டோ** (தே.அ.அஅ. இல. 647170738V) ஆகிய என்னால் கொச்சிக்கடை, தளுவகொட்டுவ, தக்கியா வீதி, இல. 484/1இல் வசிக்கும் **விக்ரம ஆரச்சிகே ருசித் நுவந்த பெர்னாண்டோ** (தே.அ.அ.இல. 199609402345) என்பவருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டில் இலங்கை இத்தாலி தூதுவர் அலுவலகத்தில் மிலானோவில் 2018 ஜுலை 09ம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட கம்பஹா பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் தினப்புத்தக இல. 2949 எழுதி பதிவு செய்துள்ள அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

**டபிள்யூ.ஏ.எச்.எஸ். பியாட்ரிஸ் பெர்னாண்டோ**

2022 ஏப்ரல் 27ம் திகதி

## இரத்தினபுரி மாநகர சபை – நான்காம் முறை கேள்வி கோரல்

### சேவை மற்றும் இடங்களை 2022 ஆண்டிற்கு குத்தகைக்கு விடல்

இரத்தினபுரி மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சேவை மற்றும் இடங்களை 2022ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்காக நான்காம் முறையாக கேள்விகள் கோரப்படுகின்றன.

- **கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் ஆரம்பிக்கப்படும் தினம்** : 2022.04.29
- **கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் முடிவடையும் திகதி மற்றும் நேரம்** : 2022.05.24 பி.ப. 3.00
- **கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவடைந்த திகதி மற்றும் நேரம்** : 2022.05.25 மு.ப. 10.00
- **கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்** : 2022.05.25 மு.ப. 10.30

| தொடர் இலக்கம் | சேவை மற்றும் இடங்கள் | குறைந்த பட்ச மாதாந்த கட்டணம் | | விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்வி பிணை வைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுச் சந்தை மீன் கடை | கடை இல. 38 | ரூ. 36,531.00 | ரூ. 3,000.00 | ரூ. 20,000.00 |
| 2 | பொதுச் சந்தை மீன் கடை (கடை இலக்கம் 39/40) | கடை இல. 39 | ரூ. 32,400.00 | ரூ. 1,000.00 | ரூ. 15,000.00 |
| | | கடை இல. 40 | ரூ. 32,400.00 | ரூ. 1,000.00 | ரூ. 15,000.00 |
| 3 | மத்திய பஸ் நிலையம் தனியார் பஸ் நிறுத்தும் கட்டணங்களை அறவிடல் (ஒரு பஸ்ஸிலிருந்து ரூ. 50.00) | | ரூ. 312,295.50 | ரூ. 3,500.00 | ரூ. 25,000.00 |
| 4 | மனசர பஸ் முற்றவெளி குளியல் அறை, உணவகம் மற்றும் மலசல கூடத்தை நடத்திச் செல்லல்<br>I. பஸ் நிறுத்தி வைத்தல் ரூ. 100,000.00<br>II. குளியலறை ரூ. 40,000.00<br>III. மலசலகூடம் ரூ. 20,000.00 | | ரூ. 162,000.00 | ரூ. 2,500.00 | ரூ. 15,000.00 |
| 5 | இரத்தினபுரி மாநகர சபையின் பொதுச் சந்தை கட்டிடத்தொகுதியின் பின்புறம் வாகன நிறுத்துமிடம் மற்றும் பொது மலசலகூடத்தை நடத்திச் செல்லல் | | ரூ. 32,400.00 | ரூ. 2,500.00 | ரூ. 20,000.00 |
| 6. | தெமுவாவத்த மாணிக்ககல் வர்த்தக கட்டிடத் தொகுதியின் அருகில் வாகன நிறுத்துமிடத்தை நடத்திச் செல்லல் | | ரூ. 20,250.00 | ரூ. 1,500.00 | ரூ. 5,000.00 |

**மோட்டார் வாகனம் நிறுத்தி வைக்கும் கட்டணத்தை அறவிடல்**

| தொடர் இல. | சேவை மற்றும் இடங்கள் | குறைந்த பட்ச கட்டணம் | விண்ணப்பப்படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு |
|---|---|---|---|---|
| 1 | பிரதான வீதி குடுகல்வத்த ஜகத்குரிய சந்தி முதல் வரக்காதொட்ட பாலம் வரை | ரூ. 131,220.00 | ரூ. 3,000.00 | ரூ. 20,000.00 |
| 2 | நகர சபை பிரதேசம் ச.தோ.ச. சந்தி முதல் கங்க அத்தர எல்லை வரை | | | |
| 3 | நகர சபையின் முன்னால் நாம்படுள்ள நிரப்பு நிலையம் முதல் நகர சபை பிரதேசம் | | | |
| 4 | நவநகரம் மாவட்ட செயலகம் அருகில் | | | |
| 5 | பொருட்களஞ்சிய வீதி பாலித்த ஸ்டோர்ஸ் அருகிலிருந்து செலான் வங்கி வரை<br>**கவனிக்கவும் :-**<br>மேற்படி தொடர் இல. 1 முதல் 5 வரையான வாகன நிறுத்துமிடங்களில் சகல வாகனமும் முதலாம் 15 நிமிடங்களுக்கு கட்டணங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது. முதலாம் மணித்தியாலம் ஆரம்பமாவது வாகனம் நிறுத்தப்பட்டு 15 நிமிடங்களின் பின்னராகும். | | | |

**17. (11) வாகனங்களை நிறுத்தி வைக்கும் போது அறவிடக்கூடிய கட்டணங்கள்**

| | வாகன வகை | முதலாம் மணித்தியாலம் | மேலதிக மணித்தியாலம் |
|---|---|---|---|
| அ) | மோட்டார் சைக்கிள் (அறவிடல் ரூ. 20.00) | ரூ. 20.00 | ரூ. 10.00 |
| ஆ) | முச்சக்கர வண்டி (அறவிடல் ரூ. 30.00) | ரூ. 30.00 | ரூ. 20.00 |
| இ) | கார், வேன், இலகு வாகனம் (அறவிடல் ரூ. 50.00) | ரூ. 50.00 | ரூ. 20.00 |
| ஈ) | 26 பயணிகள் அல்லது 26 பேருக்கு குறைந்த எண்ணிக்கையில் கொண்டு செல்வதற்காக அனுமதிப்பத்திரம் கொண்ட பஸ் இற்காக (அறவிடல் ரூ. 70.00) | ரூ. 70.00 | ரூ. 20.00 |
| உ) | 26 பயணிகளுக்கு மேல் கொண்டு செல்வதற்காக அனுமதிப்பத்திரம் கொண்ட பஸ் அல்லது மோட்டார் கோச் இற்கு (அறவிடல் ரூ. 100.00) | ரூ. 100.00 | ரூ. 25.00 |
| ஊ) | லொறி ஒன்றிற்கு (அறவிடல் ரூ. 50.00) | ரூ. 50.00 | ரூ. 20.00 |
| எ) | வேறு வாகனங்களுக்கு (அறவிடல் ரூ. 50.00) | ரூ. 50.00 | ரூ. 20.00 |
| | கவனிக்கவும்:-<br>வைத்தியசாலைக்கு அருகில் கட்டணம் அறவிடுவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. | | |

- பொறியிடப்பட்ட சகல கேள்வி விண்ணப்பங்களும் 2022.05.25 மு.ப. 10.00 இற்கு முன் இரத்தினபுரி மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம் அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மேற்படி தினம் குறித்த நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்பலாம்.
- மேற்படி தினம் குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- சமர்ப்பிக்கப்படும் மாதாந்த கட்டணங்களுக்கு மற்றும் விண்ணப்பப் படிவக் கட்டணத்திற்கு VAT (அரச வரித் தொகை) அறவிடப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்களால் கேள்வி தொகை போன்று மூன்று மடங்கு தொகையில் ஒப்பந்தம் கைச்சாத்து இடுவதற்கு முன் உடன்படிக்கை பிணையாக இரத்தினபுரி மாநகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்து 07 நாட்களுக்குள் மூன்று மாத பிணை வைப்புச் செய்து உடன்படிக்கையில் கையொப்பமிடல் வேண்டும்.
- கேள்வி விண்ணப்பங்களை குறித்த கட்டணத்தைச் செலுத்தி மாநகர சபையில் 2022.04.29ம் திகதி முதல் அரச வேலை நாட்களில் 2022.05.24 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.
- சகல கேள்வி விண்ணப்பங்களும் கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் மாநகர சபை கேள்விச் சபைக்கு உரியது.
- மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.
  மாநகர ஆணையாளர் :- 045-2222275/ 045-2222759
  மாநகர கணக்காளர் :- 045-2231900
  2022.04.26ம் திகதி

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**இரத்தினபுரி.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/04/051 | 7920 KGS. Of Grease EP-2 | 94,500.00 | 1,000.00 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/17/059 | 500M. of 35MM² CU/XLPE/ PVC 4 Core Power Cable | 45,000.00 | 1,000.00 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/01/051 | 30 Nos. 1200 X 20 18PR Motor Tyres for Mitsubishi FD 150 Fork Lift Trucks | 40,000.00 | 1,000.00 | 2022.05.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - செயற்றிட்ட அடையாளம் : P 163306**

## கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் சார்பில் உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழு தலைவர் பிரதான அலுவலகத்திற்கு சூரிய சக்தி பொறித்தொகுதியை நிறுவுதல் வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர் / செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்கள் அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-05-04ஆம் திகதி முதல் 2022-05-24ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. 2022-05-25ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் தலைவர், உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு, பட்டணமும் சூழலும் பிரதேச சபை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக ஏற்படும் ஏதேனும் கிரயம் அல்லது செலவுகளுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்கமாட்டார்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | வேலை விபரங்கள் மற்றும் ஒப்பந்த இலக்கம் | பெறுகை நிறுவத்தின் பெயர் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் | விலைமனு ஆவணத்தின் விலை (ரூபா) | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விலை மனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| பட்டணமும் சூழலும் பிரதேச சபை | திருகோணமலை, பிரதான அலுவலகத்தில் சூரிய சக்தி பொறித்தொகுதியை நிறுவுதல் 2022-02-EP-Tri-Town & Gravets ps | பிரதேச சபை, பட்டணமும் சூழலும் | பிரதேச சபை, பட்டணமும் சூழலும் 026-2222150 | 3,000.00 | 100,000.00 | 2022-08-10 வரை | 2022-09-07 வரை |

**தலைவர், உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு,**
**பட்டணமும் சூழலும் பிரதேச சபை,**
**திருகோணமலை.**
**2022-04-26.**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

2021.04.01 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு டி. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2018.11.13ஆம் திகதிய 304ஆம் இலக்க ஈட்டுமுறி மீது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 40,000,000.00 (நாற்பது மில்லியன் ரூபாய்) நிரந்தர மேலதிகப்பற்றின் பேரில் 2021.02.28 வரையான வட்டியும் முதலுமாக 44,518,100.04 ரூபாயும் (நாற்பத்து நான்கு மில்லியன் ஐந்நூற்றுப் பதினெட்டாயிரத்து நூறு ரூபாய் நான்கு சதம்) அத்துடன் 2021.03.01ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு AWPLR+2% (இரண்டு வீதம்) என்ற வீதப்படி குறித்த ரூ. 40,000,000.00 (நாற்பது மில்லியன் ரூபாய்) நிரந்தர மேலதிகப்பற்றின் பேரில் செலுத்த வேண்டியுள்ள முதல் தொகை மீதான மேலதிக வட்டியும் இல. 17, நான்காம் குறுக்குத்தெரு, கொழும்பு 11 என்ற முகவரியில் M/S சிரஞ்சீவி என்ற பெயரில் பங்காண்மை நிறுவனம் ஒன்றை நடாத்திவரும் திரு. அருள்நேசன் துளசிதாசன் மற்றும் திருமதி. சந்திரவதனா துளசிதாசன் ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. குறித்த 3624ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள மேற்குறித்த **44,518,100.04** ரூபாயையும் **(நாற்பத்து நான்கு மில்லியன் ஐந்நூற்றுப் பதினெட்டாயிரத்து நூறு ரூபாய் நான்கு சதம்)** அத்துடன் 2021.03.01ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19, 28ஆம் பிரிவுகளுக்கும் (397ஆம் அத்தியாயம் அதன் திருத்தங்களுக்கமமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு **இல. 50/3, விகார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்ரி. கருணாரத்னவுக்கும்** இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி **புறக்கோட்டைக்** கிளையின் முதுநிலை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணத்தின் **கொழும்பு** மாவட்டத்தில் **கொழும்பு** மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொழும்பு பிரதேச செயலகர் பிரிவின் கீழுள்ள **அளுத்மாவத்தை** கிராம சேவகர் பிரிவில் நான்காம் வட்டாரத்தில் உள்ள கொழும்பு 5 அளுத்மாவத்தை வீதியில் அமைந்துள்ள **இல. 472, அளுத்மாவத்தை வீதி** என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட **வலவ்வேவத்தை மற்றும் கொரக்கஹவத்தை** என அழைக்கவும். அறியப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்கிரமசிங்க தயாரித்த 1994.09.08ஆம் திகதிய 3068ஆம் இலக்க வரைபடத்தில் **காணித்துண்டு B** என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணியானது வடக்கில் அளுத்மாவத்தை வீதியையும் கிழக்கில் இல. 476, அளுத்மாவத்தை வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகளையும் தெற்கில் காணித்துண்டு C ஐயும் மேற்கில் காணித்துண்டு A ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேலும், இக்காணியானது குறித்த 3068ஆம் இலக்க வரைபடத்தின்படி **பதினேழு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள்** (AO.RO.P17.50) அல்லது **பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு நான்கு மூன்று (0.0443)** ஹெக்டயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

**காணித்துண்டு B என அடையாளப்படுத்தப்பட்டுள்ள குறித்த காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்**

மேற்குறித்தவாறு நான்காம் வட்டாரம், **அளுத்மாவத்தை** வீதியில் அமைந்துள்ள **வலவ்வேவத்தை மற்றும் கொரக்கஹவத்தை** என அழைக்கவும் அறியப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. சின்னத்தம்பி தயாரித்த 1988.11.26ஆம் திகதிய 2202ஆம் இலக்க வரைபடத்தில் **காணித்துண்டு B** என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** அளுத்மாவத்தை வீதியையும் **கிழக்கில்** இல. 476, அளுத்மாவத்தை வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகளையும் **தெற்கில்** காணித்துண்டு C ஐயும் **மேற்கில்** காணித்துண்டு Aஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேலும், குறித்த 2202ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினேழு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (AO.RO.P17.5) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணியானது கொழும்பு காணிப் பதிவகத்தில் பக்கம் D 232/66இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**இலங்கை வங்கி**
**பறக்கோட்டை.**

**பெயர் - திருமதி ஆர்.எம்.டி ரத்நாயக்க**
**பதவி - முதுநிலை முகாமையாளர் (அறவிடல்)**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

**இலங்கைத் துறைமுக அதிகார சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**M/T விஜயபாகுவின் கரையில் திருத்தவேலைகளைச் செய்வதற்கான திருத்தவேலைகள், விசேடங்கள் மற்றும் திசை உந்துவிசை ஆய்வுகள் மற்றும் ஹல் சுத்திகரிப்பு, நிறப்பூச்சு மற்றும் ஷாப்ட் சீல்களை பிரதியீடு செய்வதற்கான கேள்வி**

**(TENDER FOR DRYDOCKING OF M/T VIJAYABAHU FOR DOCKING, SPECIAL AND DIRECTIONAL PROPELLER SURVEYS AND HULL CLEANING, PAINTING AND REPLACEMENT OF SHAFT SEALS)**

**கேள்வி இல: EW/04/PT/2022/MA/07–1**

1. 500GRT கப்பல்கள் மற்றும் 40 மீற்றர் நீளம், 12 மீற்றர் அகலத்திற்கு மேற்பட்ட கரையில் திருத்த வேலைகளைச் செய்வதற்குத் தேவையான வசதிகளைக் கொண்ட கப்பற் துறையில் M/T விஜயபாகுவின் (IMO No. 9141129) கரையில் திருத்தவேலைகளைச் செய்வதற்கான திருத்தவேலைகள், விசேடங்கள் மற்றும் திசை உந்துவிசை ஆய்வுகள் மற்றும் ஹல் சுத்திகரிப்பு, நிறப்பூச்சு மற்றும் ஷாப்ட் சீல்களை பிரதியீடு செய்வதற்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் 500GRT விற்கும் குறையாத கப்பல்கள் அல்லது இழுவைப் படகுகளை கரையில் திருத்தவேலைகள் செய்த முன் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிகரான சேவை வியாபாரத்தில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களுக்காவது இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் கடல்சார் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமான 4,000.00 (8% VAT அடங்கலாக) ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், 2022-05-04ஆம் திகதியிலிருந்து 2022-05-20ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. சகல விலைமனுக்களுடனும் 310,000.00 ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“Dry docking of M/T Vijayabahu (IMO No. 9141129) for docking, Special and Directional Propeller Surveys and Hull cleaning, Painting and Replacement of Shaft seals- EW/04/PT/2022/MA/07-1”** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. 2022-05-23ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் பிரதான பொறியியலாளர் (கடல்சார்), கடல்சார் பொறியியல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் சமுகத்தில் அதே முகவரியில் திறக்கப்படும்.

**பிரதான பொறியியலாளர் (கடல்சார்),**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு 01**
**தொலைபேசி இல : 011-2482330, 011-2342537**
**தொலைநகல் இல : 011-2342537**

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper (Except Thinakaran Varamanjari) ரூ. 500/-
Two Newspapers (Except Thinakaran Varamanjari) ரூ. 700/-
Three Newspapers ரூ. 850/-
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC)**

**திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு**

# முன்மொழிவுகளுக்கான கோரிக்கை
# மேல் மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (VET) திட்டத்தினைத் தயாரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) ஆனது, மேல் மாகாண சபை மற்றும் மாகாணத்திலுள்ள மூன்று மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து நாட்டில் நிலவும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் நிலவும் கேள்விகளிற்கு ஏற்ப மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளை (TVET) சீரமைக்கும் நோக்கில் மேல் மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) ஓர் செயற்பணி அடிப்படையில் மேல் மாகாணத்திற்கான மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தினைத் (VET) தயாரிப்பதற்காக ஆர்வமுடைய ஆலோசனை நிறுவகங்கள்/ ஸ்தாபனங்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

## திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு அவசியமான தகைமைகள்

மனிதவளத் தேவைப்பாடுகள் பற்றிய திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல், மேல் மாகாணத்திற்கான திறன்களின் தேவைப்பாடுகள் பற்றிய கேள்விகள் மற்றும் வழங்கல்களைப் பகுப்பாய்வு செய்தல் ஆகியன தொடர்பாக தொழில் ரீதியிலும் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலும் தேர்ச்சிமிக்க நிறுவகங்கள்/ ஸ்தாபனங்கள் மற்றும் தரப்பினர் இச் செயற்பணி தொடர்பான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரி நிறுவகங்கள்/ ஸ்தாபனங்கள் மற்றும் தரப்பினர் அனைத்து உபதுறைகள் தொடர்பாகவும் கடந்த ஐந்து வருடங்களுக்கான ஆய்வினை மேற்கொண்டு தொழிற்துறை வளர்ச்சி மற்றும் ஏனைய பொருளாதார தேவைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் எதிர்வுகூறலினை மேற்கொள்ளக்கூடிய ஆற்றலினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுடைய தரப்பினர் ‘‘இரு தபாலுறை முறைமை’’ இனைப் பயன்படுத்தி தொழில்நுட்பம் சார்ந்த திட்ட முன்மொழிவு மற்றும் நிதி சார்ந்த திட்டமுன்மொழிவு ஆகியவற்றினைக் கையளித்தல் வேண்டும். இச் செயற்பணி தொடர்பான விதிமுறை குறிப்புக்களை (ToR) www.tvec.gov.lk என்ற TVEC இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

தயவுசெய்து விதிமுறை குறிப்புகளில் (ToR) குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளை 2022 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் நாயகம்**
**மூன்றாம் நிலைக்கல்வி,தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC)**
**இல 354/ 2, “நிபுணதா பியச”, 03 ஆம் மாடி, எல்விட்டிகல மாவத்தை,**
**நாரஹேன்பிட்டி, கொழும்பு 05**

**தொலைபேசி: 0117608000 தொலைநகல்: 0112555007 மின்னஞ்சல்: ajith@tvec.gov.lk**
**இணையத்தளம்: www.tvec.gov.lk**



# ஆண்களுக்கான எல்லே போட்டி

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டு கழக அணி சம்பியனானது. இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென்தோமஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை சென்தோமஸ் அணி வழங்கப்பட்ட 40 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வழங்கப்பட்ட 40 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றனர். இதனால் பருத்தித்துறை சென் தோமஸ் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.



## இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தல்:

# இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்க கோரிக்கை

**திருகோணமலை குறூப் நிருபர்**

தேர்தலை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு இலங்கை கால்பந்து சம்மேளனம் விளையாட்டு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிபா அங்கீகரித்த புதிய அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்துமாறு விளையாட்டு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உத்தியோகத்தர்களுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக நடத்தப்பட வேண்டுமென உதைபந்தாட்ட சம்மேளனம் உட்பட 26 விளையாட்டு சங்கங்களுக்கு விளையாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அறிவுறுத்தலின் பேரில் உருவாக்கப்பட்ட இலங்கை கால்பந்தாட்டத்தின் யாப்பு வரைவு, விளையாட்டு அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவை ஆய்வு செய்த விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி அமல் எதிரிசூரிய, அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட பின்னரே தேர்தலை நடத்த வேண்டும் என கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று சபை, உதைபந்தாட்ட பேரவை மற்றும் விசேட பொதுச்சபை கூட்டங்களை நடத்தி தேர்தல் திகதியை அறிவிப்பதில் உள்ள நடைமுறைச் சிரமத்தை விளையாட்டுத்துறை அமைச்சுக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கோரிக்கைக்கு அமைய தேர்தலை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு இணக்கம் தெரிவித்தால் அது வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

26 விளையாட்டு சங்கங்களுக்கும் இந்த ஆண்டு மே 31 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று விளையாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

நியாயமான காரணங்களுக்காக இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான ஒத்திவைப்புக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தேர்தல் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்துடன் முரண்படாமல் நடத்தப்பட வேண்டும் எனவும் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் கடந்த வருடம் ஜூன் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்றதுடன், புதிய உதைபந்தாட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட பின்னரே அடுத்த தேர்தலை நடத்த வேண்டும் என சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவுறுத்தியது.

புதிய உதைபந்தாட்ட யாப்பின் பிரகாரம் இத்தேர்தல் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும், இல்லையெனில் சர்வதேச தடை விதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். புதிய யாப்பு வரைபு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அடுத்த தேர்தலை நடத்த முடியுமானால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பதவிக்காலம் 4 வருடங்கள் வரை செல்லுபடியாகும்.

உத்தேச புதிய உதைபந்தாட்ட அரசியலமைப்பு வரைவு சட்ட நிபுணர்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் விளையாட்டு சங்கங்களின் தலைவர்களினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நியமனம் கட்டாயம் என விளையாட்டு அமைச்சு இலங்கை கால்பந்து சம்மேளன அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.எனவே, சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு முன்கூட்டியே அறிவிக்குமாறும் இலங்கை விளையாட்டுச் சட்டத்தின்படி இரண்டு பதவிகளுக்கும் அனுமதி பெறுமாறும் அமைச்சு கோரியுள்ளது. புதிய யாப்பு வரைவு கால்பந்து நிர்வாகத்தை மேற்பார்வையிட முழுநேர தலைமை நிர்வாக அதிகாரியை நியமிக்க வழிவகை செய்கிறது.

சர்வதேச கால்பந்து சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனம் ஆகியவை 2014 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசியலமைப்பை திருத்துமாறு வலியுறுத்தி வரும் நிலையில், இதனை இறுதி முயற்சியாக கருதுமாறு இலங்கையை வலியுறுத்தியுள்ளன.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..................
வாக்களித்தவர் பெயர் : ..................
முகவரி : ..................
மொபைல் இல. : ..................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 30-04-2022 இல. 05



நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
SLTMOBITEL

## அட்டாளைச்சேனை பிரதேச மட்ட விழா:

# சோபர் விளையாட்டு கழகம் சம்பியன்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அட்டாளைசசேனை பிரதேச செயலகம் நடாத்திய பிரதேசமட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில், அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் 06 தங்கம், 03 வெள்ளி, 01 வெண்கலம் என்ற ரீதியில் 10 பதக்கங்களைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுக் கொண்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ.சி.அஹமட் ஸாபிரின் ஆலோசனை, வழிகாட்டலில், விளையாட்டு உத்தியோகத்தர் எம். எச்.எம்.அஸ்வத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள் அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை பொது விளையாட்டு மைதானங்களில் நடைபெற்றன.

இறுதி முடிவு வருமாறு,

அட்டாளைச்சேனை சோபர் வி.கழகம் 06 தங்கம், 03 வெள்ளி, 01 வெண்கலம்.

பாலமுனை ட்ரை ஸ்டார் வி.கழகம் 03 தங்கம், 03 வெள்ளி. அட்டாளைச்சேனை பைனா வி.க. 03 தங்கம், 01 வெள்ளி, 02 வெண்கலம். அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் வி.க – 02 தங்கம், 04 வெள்ளி, 07 வெண்கலம். அட்டாளைச்சேனை அஷ்ரஃப் வி.க 02 தங்கம், 01 வெள்ளி, 02 வெண்கலம்.

அட்டாளைச்சேனை அல்நஜா வி.க. – 02 தங்கம், 01 வெள்ளி. அட்டாளைச்சேனை மாக்ஸ்மன் வி.க. – 01 தங்கம், 01 வெள்ளி.

அட்டாளைச்சேனை நியு ஸ்டார் வி.க. – 01 தங்கம்,

பாலமுனை அல்அறபா வி.க. – 02 வெள்ளி.

அட்டாளைச்சேனை எவடொப் வி.க. – 01 வெள்ளி, 02 வெண்கலம்.

அட்டாளைச்சேனை லக்கி வி.க. – 01 வெள்ளி, 01 வெண்கலம்.

அட்டாளைச்சேனை புளூஇலவன் வி.க. – 01 வெள்ளி.

அட்டாளைச்சேனை லக்கி வி.க. – 01 வெள்ளி, 01 வெண்கலம்.

பாலமுனை எவர்கிறீன் வி.க. – 01 வெள்ளி.

# காரைதீவில் களை கட்டிய சித்திரை புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா

**காரைதீவு குறூப் நிருபர்**

சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய 24வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

காலை நிகழ்வான மரதன் ஓட்டமானது கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு காரைதீவு விளையாட்டு கழக காரியாலயத்தில் நிறைவுபெற்றது.

மாலையில் விபுலானந்த மைதானத்தில் தலைவர் வி.அருள்குமரன் தலைமையில் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.



காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தவிசாளர் கி.ஜெயசிறில் ஆலோசகர்களான செ.இராமகிருஸ்ணன், வே.இராஜேந்திரன் உள்ளிட்ட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர். கல்வி சாதனையாளர்கள் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# மதிப்புமிக்க அணிகள் பட்டியலில் மும்பை முதலிடம்

ஐபிஎல் தொடரில் மும்பை அணி அதிகபட்சமாக 5 முறையும், சென்னை அணி 4 முறையும் சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

ஐபிஎல் 15வது பருவம் கடந்த மாதம் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நடப்பு பருவத்தில் சென்னை, மும்பை அணிகள் புள்ளிப்பட்டியலில் கடைசி இரண்டு இடங்களில் உள்ளன. குறிப்பாக, மும்பை அணி விளையாடியுள்ள 8 போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளது.

இந்நிலையில், ஐபிஎல் அணிகளின் விலை மதிப்பு பட்டியலை போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:




மும்பை இந்தியன்ஸ் 9,962 கோடி ரூபாயுடன் முதலிடத்திலும், சென்னை அணி 8,811 கோடி ரூபாயுடன் 2வது இடத்திலும் உள்ளது.

கொல்கத்தா 8,428 கோடி ரூபாயுடன் 3வது இடத்திலும், லக்னோ 8,236 கோடி ரூபாயுடன் 4வது இடத்திலும் உள்ளது.

டெல்லி 7,930 கோடி ரூபாயுடன் 5வது இடத்திலும், பெங்களூரு 7,853 கோடி ரூபாயுடன் 6வது இடத்திலும் உள்ளது.

ராஜஸ்தான் 7,662 கோடி ரூபாயுடன் 7வது இடத்திலும், ஹைதராபாத் 7,432 கோடி ரூபாயுடன் 8வது இடத்திலும் உள்ளது.

பஞ்சாப் 7,087 கோடி ரூபாயுடன் 9வது இடத்திலும், குஜராத் 6,512 கோடி ரூபாயுடன் 10வது இடத்திலும் உள்ளது.

# நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி சம்பியன்

யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட சுற்றத் தொடரில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியன்னானது. 27.04.2022 திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது ஆட்ட நேரமுடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினை பதிவு செய்ததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. ஆட்டம் வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக பெனால்ரி உதை வழங்கப்பட்டது. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.